பக்கங்கள் 8 விலை சதம் 30 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

மலர்: 19 மாசி 12 ரபிஅவ்: 4 இதழ்: 13

யாழ்ப்பாணம் புதன்கிழமை 23-2-77

## இந்திய ராஜ்யசபா அவசரமாகக் கூடுகிறது

### தமிழ்நாடு ராஷ்டிரபதிஆட்சியை நீடிக்க!

புதுடில்லி, பெப். 22

இந்திய ராஜ்யசபை வருகிற திங்கட்கிழமை கூடவுள்ளது. லோகசபை கலைக்கப்பட்டு தேர்தலுக்கான திகதியும் நிர்ணயிக்கப்பட்டபின்னர், குறுகியகாலத்தில் ராஜ்யசபை கூடுவது இந்திய சரித்திரத்தில் இதுவே முதல்தடவையாகும்.

தமிழ்நாடு. நாகலாந்து ஆகிய மாநிலங்களில் ராஷ்டிபதியின் ஆட்சிக் காலத்தை நீடிக்கும் நோக்கத்துடன் ராஜ்யசபா இவ்விதம் அவசரமாகக் கூடுவதாகச் சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டில் மார்ச்மாதம் 10-ம் திகதியுடன் ராஷ்டிரபதியின் ஆட்சிக்காலம் முடிவடைகிறது. நாகலாந்தில் மார்ச்மாதம் 24-ம்திகதியுடன் முடிவடைகிறது.

இந்திய அரசியலமைப்பின் பிரகாரம் லோகசபை கலைக்கப்பட்டுள்ளபோது மாநிலங்களில் ராஷ்டிரபதி ஆட்சியை நீடிப்பதற்கு ராஜ்யசபாவின் அங்கீகாரம் வேண்டும். (ஆ)

# ஏப்பிரலில் 13,000 பேருக்கு ஆசிரிய நியமனம் நிச்சயம்

## கயானு புறப்படுமுன் கல்வி அமைச்சர் கூறிய தகவல்

கொழும்பு. புதன்.

ஏப்ரல்மாதத்தில் பதின்மூவாயிரம் பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படுமென்று கல்வியமைச்சர் டாக்டர் பதியுதீன்மஹ்மூத் இன்று திட்டவட்டமாக அறிவித்தார். ஏப்ரல் 5-ம் திகதியளவில் இந்த நியமனங்கள் நடைபெறும் என்று அவர் தெரிவித்தார்.

கயானவில் [illegible]ட்டு இன்று கயானு புறப்படுமுன் பொதுநல அமைப்புநாடுகளின் கல்வி அமைச்சர்களின்மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு [illegible] தற்கு முன்னராக கல்விஅமைச்சர் இத்தகவலை வெளியிட்டார். தாம் நாடுதிரும்பியதும் இதற்கான ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்படும் என்று அவர் சொன்னர்.

ஏப்ரல்மாதம் 5-ந் திகதிமட்டில் ஜி. சி. ஈ. சித்தியடைந்த 13,000 பேருக்கு இந்த ஆசிரிய நியமனம் கிடைக்கும்.

ஆசிரிய இடமாற்றங்களையும் தாம் நிறுத்திவைத்துள்ளதாகவும் அமைச்சர் கூறினர். (ஆ)

சுன்னுகம் கோரக்கொலை:

## சந்தேகநபர்கள் இருவரும் பிணையில் செல்லஅனுமதி

மாவிட்டபுரம், செவ்

சுன்னுகம் கோரக்கொலை குறித்துக் கைதாகி ரிமாண்டிலிருந்த இரு சந்தேகநபர்களும் தலா 1000 ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுன்னுகத்தில் வைத்து வி. காராளசிங்கம் என்[illegible] கொலை [illegible] செய்தது தொடர்பாக சுன்னுகம்பொலிசாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிபதிமுன் ஆஜர் செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சுன்னுகத்தைச் சேர்ந்த வீரப்பர் அமரசூரியன், ஏழாலையைச் சேர்ந்த பொன்னம்பலம் பாலசுப்பிரமணியம் ஆகியோர் மல்லாகம் நீதிபதிமுன் மீண்டும் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவர் [illegible] அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் கோரினர்.

(7-ம் பக்கம் பார்க்க)

## யாழ்.ஆஸ்பத்திரி டாக்டர்கள் வழமைபோல் சேவை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் டாக்டர்கள் வழமைபோல் தத்தம் கடமைகளைச் செய்துவருகின்றனர்.

நோயாளர்களும் வழமைபோல் டாக்டர்களைச் சந்தித்து சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் டாக்டர்கள் நேற்று முன்தினம் திடீரென வைத்திய லீவில் சென்றதால், வைத்தியசேவை ஸ்தம்பிதம் அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தீர்க்கப்படாத தமது கோரிக்கைகள் குறித்து இதுவரை எவ்வித முடிவும் எடுக்கப்படாததை ஆட்சேபித்தே இத்திடீர் நடவடிக்கையில் கொழும்பு டாக்டர்கள் குதித்துள்ளனர். இதனல் நோயாளர்கள் பெரிதும் அல்லலுற்றனர். (உ)

## வீடமைப்பு அமைச்சராக குமாரசூரியர் நியமனம்

கொழும்பு, செவ்

தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் வீடமைப்பு அமைச்சராகவும் நியமனம் பெற்றுள்ளார்.

திரு. குமாரசூரியர் ஜனதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ முன்னிலையில் வீடமைப்பு அமைச்சராக இன்று சத்தியப் பிரமானம் எடுத்துக் கொண்டார்.

கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து வீடமைப்பு அமைச்சராக இதுவரை இருந்த திரு. பீட்டர்கெனமன் தமது பதவியை ராஜினமாச் செய்ததில் இந்தப்பதவி காலியாகியிருந்தது.

தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சர் திரு. குமாரசூரியருக்கு வேறு அமைச்சு கிடைக்கவிருப்பது பற்றிமுதன் முதலாக 'ஈழநாடு' செய்தி வெளியிட்டது நினைவிருக்கலாம்.

தற்போது பிரதி கல்வி அமைச்சர் பதவியும் காலியாக யுள்ளது. திரு. பி. வை. துடாவை ராஜினமாச் செய்ததின் மூலம் இந்தப் பதவி காலியானது. (ஆ)

சங்கானை ப.நோ.கூ. சங்க

## உணவுக்களஞ்சியம் முன் ஊழியர் சத்தியாக்கிரகம்!

### 6 தினம் உணவுவிநியோகம் இல்லை

சங்கானை, செவ்

சங்கானை பகுதி மக்கள் தமக்குரிய பங்கீட்டு உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாமல் பலத்த கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். கடந்த ஆறு தினங்களாக இப்பகுதியில் உணவுப் பொருள் விநியோகம் நடைபெறவில்லை. ப.நோ. கூ. சங்கங்களில் மட்டுமல்ல உத்தரவு பெற்ற வியாபார நிலையங்களிலும் விற்பனை நடைபெறவில்லை.

சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்க உணவு களஞ்சியத்திற்கு முன்னல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் சத்தியாக்கிரகம் இருந்து வருகிறார்கள். இதனல், பாவனையாளர்களுக்கு அங்கிருந்து அத்தியாவசிய உணவு பொருள் வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இன்று இங்கு வந்திருந்த உயர் அதிகாரிகள் குழுவொன்று, களஞ்சியத்திலிருந்து உணவு வகைகளை எடுப்பதற்கு வழிவிடுமாறு சத்தியாக்கிரகம் செய்யும் தொழிலாளர்கள் கேட்டபோது அவர்களைவழிவிட மறுத்து விட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

சந்தேகநபர்களிடம் நகைகள் வாங்கும்

## நகை வியாபாரிகளின் 'லைசென்ஸ்' ரத்தாகும்!

கொழும்பு, செவ்.

சந்தேகமான முறையில் நடமாடும் நபர்களிடம் தங்க நகைகளை வாங்கும் நகைவியாபாரிகளின் வியாபார லைசன்ஸ் ரத்துச் செய்யப்படும் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பொது மக்களிடம் வாங்கும் சகல நகைகளுக்கும் பதிவு வைத்திருப்பதுடன் பற்றுச் சீட்டு வழங்க வேண்டுமென்றும், பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

நகைகளை விற்பவர்கள், அடையாள அட்டைகளைக் காட்ட வேண்டுமென்றும், நகை வியாபாரிகள் அடையாள அட்டையில் உள்ள பெயர், விலாசம், இலக்கங்களைப் பதிவு செய்து வைக்க வேண்டுமென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவை மட்டுமன்றிப் பொது மக்களிடமிருந்து வாங்கும் நகைகள் பற்றிய விபரம், நிறை ஆகியவற்றையும் பதிந்து வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [க-அ]

## மே 19-ல வெளிநாட்டு வங்கி சுவீகரிப்பு மசோதா!

### பேரவைக்கு வரும்

கொழும்பு. புதன்

மேமாதம் 19-ம்திகதி தேசிய அரசுப்பேரவை கூடும்போது வெளிநாட்டு வங்கிகளை தேசியமயமாக்கும் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டு, நிறைவேற்றப்படும் என்று நிதிஅமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் ஆர். பண்டாரநாயக்கா கூறியிருக்கிறர்.

ஐக்கியமுன்னணி அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த இந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதில் அப்போதிருந்த நிதியமைச்சர் தவறிவிட்டாரென்றும் இதனைத் தாம் இப்போது

(8ம் பக்கம் பார்க்க)

# யாழ்லயன் களியாட்டு விழா-77

(யாழ். புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக)

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 9-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் பிரவேசக் கூப்பன்களை இணைச் செயலாளர் திரு. இ. ஆர். ஜோசேப், 484, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**கீழ்க்காணும் பிரவேசக் கூப்பன்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.**

1977-ம் ஆண்டு பங்குனிமாதம் 19-20-ம் திகதிகளில் நடைபெறும் யாழ். லயன் கழக முதலாவது களியாட்டுவிழா போட்டிகளில் கீழ்க்குறிப்பிடும் விளையாட்டுப் போட்டிக்கு என்னையும் ஒரு போட்டியாளராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போட்டியில் பங்கு பற்றித் தகுதியுடையேன் என்பதை உறுதிப்படுத்தி போட்டியில் பங்கு பற்றுவ தன் மூலம் எனக்கு அல்லது எனது சொத்துக்கு ஏற்படும் காயம் அல்லது சேதத்துக்கு நானே முழுப் பொறுப்பாளி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு ஏற்படும் எவ்விதமான காயம் அல்லது சேதத்திற்கு விழா நிர்வாகிகள் அவர்களின் பிரதிநிதிகள் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எவரும் பொறுப்பாளிகளாகமாட்டார்கள் என்றும் அவர்களிடமிருந்து எந்தவிதமான நஷ்டஈடும் கோரமாட்டேன் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

போட்டி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட சகல விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன். போட்டியில் நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே கூப்பன்களை போட்டியாளர்கள் அனுப்பவேண்டும்.

## போட்டி நிகழ்ச்சிகள்

[1] வர்த்தக ஊர்திகள் பவனி, [2] கைத்தொழில் ஊர்திகள் பவனி, [3] விவசாயஊர்திகள் பவனி, [4] பழைய மோட்டார் வாகன பவனி, [5] அலங்கார பவனியில் விநோதஉடை தரித்தோர் காட்சிகள், [6] மாணவர் அணிவகுப்பும் 'பாண்ட்' வாத்தியப் போட்டியும், [7] 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் விநோத உடைப்போட்டி, [8] 90 மைல் மரதன் சயிக்கிள் ஓட்டம் வவனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை [9] 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு 25 மைல் சைக்கிள் ஓட்டம், [10] 5 மைல் யுவதிகள் சைக்கிள் ஓட்டம், [11] 26 மைல் மரதன் வீதியோட்டம், [12] நீச்சல் போட்டி, [13] படகோட்டப்போட்டி, [14] கராட்டிப் போட்டி, [15] யாழ். ஆணழகன்போட்டி, [16] மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி. [17] யாழ்.அழகு ராணிப் போட்டி,

இந்த பதினேழு போட்டிகளிலும் கலந்துகொள்ளும்விண்ணப்பதாரர் அனைவரும் வடமாகாணத்தில் வசிப்பவர்களாக இருக்கவேண்டும். 18வது போட்டிக்காக இடம்பெறவுள்ள வாணவேடிக்கைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாகப் பங்குபற்றலாம்.

நிகழ்ச்சி ..............................
(பெரிய எழுத்துக்களில்)

பெயர்: ..............................

விலாசம்: ..............................

வயது: ....................

விளையாட்டுப்போட்டி நிபந்தனைகளுக்கு சம்மதித்துப் போட்டி நீதிபதிகளின் முடிவை ஏற்றுக்கொள்வேன்.

..............................
போட்டியாளரின் கையொப்பம்

போட்டியாளர் 21 வயதுக்குட்பட்டவராக இருப்பின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதிப்படுத்த வேண்டும்.

போட்டி நிபந்தனைகளையும், விதிகளையும் நான் மேற்கண்ட போட்டியாளருக்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவர் பங்கு பற்றுவதில் எனக்கு ஆட்சேபமில்லை.

**பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒப்பம்**

..............................

கலை நிகழ்ச்சிகளாக (1) நாதஸ்வரம், (2) பரத நாட்டியம், (3) மெல்லிசை, (4) வில்லுப்பாட்டு, (5) குட்டி நாடகங்கள், (6) யோகாசனம், (7) பொப் இசை, (8) லிம்போ நடனம், (9) பெல்லி நடனம், (10) மாயா ஜாலக் காட்சி, (11 மெய்வல்லுநர் காட்சி (இலங்கையின் பல மெய்வல்லுநர் பங்குபற்றுவது).

மேற்படி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் எந்தத் தனி நபரோ அல்லது பாடசாலையோ, கழகங்களோ விண்ணப்பங்களை இவ்வருடம் பங்குனி மாதம் 9ந் திகதிக்கு முன் அமைப்புச் செயலாளர், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

யாழ். மாவட்டத்தில்

# சீமெந்து விநியோகத்தில் புதிய நடை முறை

மாவிட்டபுரம், செவ்வாய்

யாழ். மாவட்டத்திற்கான சீமெந்து விநியோகத்தில்புதிய முறை ஒன்று நடைமுறைக்கு வந்துள்ளது.

இதுவரைகாலமும் அரசாங்க அதிபர் உதவிஅரசாங்க அதிபர்கள் ஆகியோரால் சிபார்சு செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கே காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலையில் சீமெந்து வழங்கப்பட்டது.

ஆனல் இனிமேல் யாழ். மாவட்டத்திற்கென 1000 தொன் சீமந்து ப.நோ.கூ. சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டு உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளுக்கு பகிர்ந்து வழங்கப்பட உள்ளது. அத்துடன் கோவில் வேலைகள் பள்ளிக்கூட அமைப்புகள்,போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கும் சீமெந்து விநியோகிக்கப்பட உள்ளது.

ப.நோ. கூசங்கச்களுக்கான சீமெந்து விநியோகம் செவ்வாய்,வியாழன் நாட்களிலும் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கானவிநியோகம் திங்கள் புதன்,வெள்ளி ஆகிய நாட்களிலும் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் நடைபெறும். (உ)

வவுணதீவு, செவ்வாய்

மட்டக்களப்பு மாவட்ட அரசியல் அதிகாரியும், இரண்டாது எம். பி. யுமான திரு. இராஜன் செல்வநாயகத்திற்கு நாவற்காடு கிராம மக்களால் வரவேற்பளிக்கப்பட்டது.

இவ்வரவேற்பின் பின்னர் திரு. அ. வயிரமுத்து தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. (உ)

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

New Session commences - 16th May 1977.

5 Technician Courses

Craft courses in Welding and Foundry Practice.

Prospectus and Application Form Re 1/-

Scholarships available.

Director,
J. C. T. I., Vaddukoddai.

5537

'மெற்றலிக்ஸ்'

கணித உபகரணங்கள்

(Metalix Mathemat cal Instruments)

மொத்தமாகவும் சில்லறையாகவும எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்த விலை:

சாதாரணம் டசின் ரூ. 93-24
விசேஷம் " ரூ. 137-70

சீடிலீஸ் லிமிட்டெட்

[யாழ்ப்பாணம்]

151, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.
போன்: 507

5543

## கோட்டு விற்பனவு விளம்பரம்

M. B. 13765

1. T. W. அருள்நாயகம் கைம்பெண் நாகம்மா 2.அருள் நாயகம் குமாரசிங்கம் 3. அருள்நாயகம் தெய்வேந்திரன் 4. அருள்நாயகம் நாகேந்திரன் 5. அருள்நாயகத்தின்மகள் தேவராணி 6. அருள்நாயகத்தின் மகள் தேவரதி 7. அருள்நாயகம் தேவசிலன் 8. அருள்நாயகம் தேவபாலன்.

5லிருந்து 8 வரை பராயமற்றவர்கள். இவர்கள் சார்பாக முதலாம் வழக்காளி அனைவரும் நுணுவில் மேற்கு.

வழக்காளிகள்

எதிராக

1. சுப்பிரமணியம் பாலகிருஷ்ணனும்
2. பெண் மனோன்மணி

இருவரும் 149/A, அரசடி ரோட், கந்தர்மடம்.

எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 13765-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 9-ம் திகதி புதன்கிழமை (9-3-77) முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதலாம் இரண்டாம் மூன்றும் நாலாம் வழக்காளிகளுக்கும் 5, 6, 7, 8 பிராயமற்ற வழக்காளிகளுக்கு முதலாம் வழக்காளி மூலமாகவும் தீர்த்த தீர்வைத் தொகை ரூபா 5880/- மேலும் 18-4-73 தொடக்கம் 5-7-74 வரை ரூபா 4000/-க்கு 14% வட்டியும் பின் முழுத்தொகையும் இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு 692 ரூபா 25 சதம். இதில் ரூபா 1500/- கொடுக்கப்பட்டது.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு "அம்மைக்கோயில்" வெளி ப. நி. 2ம் குழி 11½யும் புதிதாகக் கட்டப்பட்ட-வீடும் பயிர் வகைகளும் கிணறும் இதற்கு எல்லை கிழக்கு நடராசாவின் மகள் ராஜேஸ்வரிக்கும் பங்காளிக்கும் உரிய ஆதனம். வடக்கு செல்லையா பெண் தங்கத்துக்குரிய ஆதனம், மேற்கு ஒழுங்கையும் சுப்பிரமணியம் பெண் கதிராசிப்பிள்ளைக்குரிய ஆதனமும், தெற்கு சுப்பிரமணியம் பெண் கதிராசிப்பிள்ளைக்கும் சரவணமுத்து கிருஷ்ணசாமிக்கும், பெண் பாக்கிய லட்சுமிக்கும் உரிய ஆதனம். தெற்கெல்லைக் காணிக்கு கிழக்கெல்லை ஓரமாக 5 அடி அகலமுள்ள பாதையால் தெற்கில் இருக்கும் ரோட்டுக்குப் போக உருத்தும் தெற்கெல்லைக் காணிக்கு கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்பு உருத்தும் புறநீங்கல் பதிவு இல. D 259/241.

சி. செ. மாரிமுத்து,
நீதிமன்றங்களின்
விற்பனவு ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

விதானை வளவு,
சித்தன்கேணி,
22-12-76.

5540

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஆஸ்பத்திரி பாடசாலை, புகையிரத நிலையம் ஆகியவற்றிற்கு அருகாமையில் சகல வசதிகளும், (மின்சாரம், தண்ணீர் பைப் வசதி) கொண்ட வீட்டுடன் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். 88/3 பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம். 5528

காரைநகர் கிறிஸ்தவ கோவில் வளவில் பழைய குருமனையின் கதவுகள், நிலைகள், யன்னல்கள் (வேப்பமரம்) விலைக்கு இருக்கிறது. தனாதிகாரி. 5529

### தேவை

''தாரணி'' விற்பனை செய்யக்கூடிய விநியோகஸ்தர்கள் தேவை. விலை 35 சதம், நிர்வாகி, ''தாரணி'', சரவணை, வேலணை. 5488

யாழ் இளைஞர் கழகம் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தும் பாலர் பாடசாலை ஆசிரிய பயிற்சி வகுப்பு மாணவிகட்கு பாலர் பாட்டுகளுக்கு அபிநயத்துடன் நடனம் கற்பிக்க ஆசிரியை தேவை. 27-2-77 ஞாயிறு காலை 9 மணிக்கு ஆனைப்பந்தியடி உயர்தரக் கல்லூரிக்கு நேரில் வரவும். 5530

### சேவை

காணி, நிலம், புலம், ஏனைய பாடங்கள் கொள்வனவு விற்பனவு, திருமணம், தொழில், ஏலம், நில அளவை ஒழுங்கு செய்தல், தமிழ் ஆங்கிலம் மொழிபெயர்ப்பு, தட்டெழுத்து பொறுப்பு ஏற்றல், கடனில் மாண்ட காணிகள் வங்கி மூலம் மீளுவதற்கு ஒழுங்கு செய்து கொடுத்தல். குறிப்பு:- தபால் மூலம், அல்லது நேரில் விபரம் அறியவும். விபரங்களுக்கு: ''தேவா நிர்வாக நிலையம்'', நீதிமன்ற ரோட்டு, மல்லாகம். 5533

### வகுப்புகள்

H. N. C. E. விஞ்ஞான, வர்த்தக வகுப்புகள் 2-3-77 புதன்கிழமை ஆரம்பமாகின்றது. 30 மாணவ மாணவிகட்கு மட்டும் இடவசதியுண்டு. சேர விரும்புவோர் உடனே விண்ணப்பிக்கவும். இ. இரத்தினகோபால், இல. 77, அரசடி வீதி, இந்து மகளிர்கல்லூரி சந்திக்கு அருகாமையில், யாழ்ப்பாணம். 5531

# தாம்போதியில் போக்குவரத்துத் தடங்கல்

மன்னூர், செவ்

மன்னூரில் எப்போதுமே நடைபெறுத வகையில் மிகப்பெரிய போக்குவரத்துத் தடங்கல் ஏற்பட்டதால் பொதுமக்கள் தங்கள் பிரயாணத்தில் பெரிதும் தாமதத்தை அனுபவித்தனர்.மன்னூர் தாம்போதியிலேயே சென்ற சிவராத்திரி அன்று இப் பெரிய தடையேற்பட்டது.

இப்பாலம் மிகவும் ஒடுக்கமானது என்பதால் வாகனங்கள் ஒன்றையொன்று விலகிச் செல்வதில் எப்போதுமே தாமதம் இருந்து வந்தது ஆயினும் சிவராத்திரியன்று அடிக்கடி வாகனங்கள் பிரயாணம் செய்ய வேண்டியிருந்ததால் இந்தத் தடங்கல் மிகவும் மோசமாக இருந்தது. ஒருசமயத்தில் சுமார் 20 பஸ்களும் பல ஜீப்களும் பாலத்தில் நின்று தடங்கலைஏற்படுத்தின. இத்தடங்கல் நீங்க அரைமணி நேரத்திற்கும் அதிகமாக எடுத்தது. (அ)

## இந்திய லோகசபைத் தேர்தல்

# 39 தமிழ்நாட்டுத் தொகுதிகளில் 195 பேர் போட்டி

## 4 நேரடி; 5 மும்முனைப் போட்டிகள்

சென்னை, பெப். 22
இந்திய லோகசபைத் தேர்தலில் தமிழ் நாட்டில் உள்ள 39தொகுதிகளில் 195 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

நியமனப் பத்திரங்களை வாபஸ்பெறுவதும், பரிசீலனை செய்வதும் நேற்றுடன் முடிவுற்றது.

தமிழ் நாட்டில் 400 பேர் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்திருந்தனர். வாபஸ்பெற்றவர்கள், நிராகரிக்கப்பட்டவர்கள் போக 195 பேரே இப்போது போட்டியிடுகின்றனர்.

சிதம்பரம், கோயம்புத்தூர், நாகபட்டினம், தஞ்சாவூர் ஆகிய நான்கு தொகுதிகளில் நேரடிப்போட்டியும், வந்தவாசி, தாசிபுரம், பொள்ளாச்சி, பழனி, பெரம்பலூர் ஆகிய தொகுதிகளில் மும்முனைப் போட்டியும் இடம்பெறும்.

புதுச்சேரியில் நான்குமுனைப் போட்டி இடம்பெறும்.

### தி. மு. க 19
### ஜனதா –19
### மார்க். கம்—2

தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் தி. மு. க. 19 தொகுதிகளிலும், ஜனதா கட்சி 19 தொகுதிகளிலும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி 2 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

### அ. அ. தி. மு. க - 21
### காங்கிரஸ் 15
### இ. கம்–4

அ. அ. தி. மு. க. 21தொகுதிகளிலும், காங்கிரஸ் 15தொகுதிகளிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் 4 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

### 3 தொகுதிகளில் 8 பேர் போட்டி

வட சென்னை, மத்திய சென்னை, தென்சென்னை ஆகிய தொகுதிகளில் 8 பேர் போட்டியிடுகின்றனர். இத்தொகுதிகளில் தலா 6 சுயேச்சை உறுப்பினர்கள் போட்டியிடுகின்றனர். (இ)

## கிராமந்தோறும் பயிர்நோய் தடுப்பு போதனை

நல்லூர், செவ்
விவசாயிகளின் நலன்கருதி விவசாயப் பயிர்களைத்தாக்கும் நோய்களைத் தடுக்கும் முறைகளை ரோரு ஸ்தாபன விவசாய அலுவலர்கள் ஒவ்வொரு பகுதிக்கும்சென்று செய்முறை மூலம் விளக்கிவருகின்றனர். (அ)

## இந்திரா தொகுதியில் 9 முனைப்போட்டி

புதுடில்லி, பெப். 22
பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் தொகுதியான ராய்பரேலியில் 9 முனைப்போட்டி இடம் பெறுகிறது.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்திருந்தோரில் 2பேர் நேற்று போட்டியிலிருந்து விலகிக் கொண்டனர்.

இதே தொகுதியில் ஜனதா கட்சி சார்பில் திரு. ராஜ்நாராயண் இந்திராவை எதிர்த்துப் போட்டியிடுகிறார். (இ)

# எகிப்தில் அடுத்த மாதம் அரபு உச்சி மகாநாடு

## ஜெனிவா சமாதான மகாநாடு குறித்து 20 நாடுகள் ஆராயும்

கெய்ரோ, பெப். 22
ஜெனிவா சமாதான மகாநாடு குறித்து அரபுநாடுகளின் உச்சிமகாநாடு ஒன்று மார்ச் மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளது என்று கெய்ரோசெய்திகள் தெரிவிக்கின்றன.

கெய்ரோவில் நடைபெற உள்ள இம்மாநாட்டில் 20அரபு நாடுகளும், பாலஸ்தீனவிடுதலை இயக்கப்பிரதிநிதிகளும் பங்குபற்றுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்காஸிய அமைதிகுறித்து ஜெனிவாவில்கூட்டப்படவிருக்கும் ஜெனிவா சமாதான மகாநாடு தொடர்பாக இம்மகாநாட்டில் விரிவாக ஆராயப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### எகிப்து-சிரியா-சூடான் உச்சிமகாநாடு

எகிப்துக்கும் சிரியாவுக்குமிடையே கடந்த வருடம் உருவாக்கப்பட்ட "கூட்டுஅரசியல் தலைமைப்பீட"த்தில் சூடானையும்இணைத்துக்கொள்வதுபற்றி ஆராயும் பொருட்டு சூடான், எகிப்து, சிரியா ஆகிய நாடுகளின் உச்சி மகாநாடு ஒன்றும் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 27ந் திகதி இந்த உச்சிமகாநாடு நடைபெறும். (இ)

## முட்டை விலை வீழ்ச்சி

நல்லூர், செவ்
யாழ்ப்பாணத்தில் 60சதத்திலிருந்து ஒரு ரூபா வரைவிற்கப்பட்ட கோழி முட்டை தற்போது 45 சதத்திற்கு விற்கப்படுகின்றது. (அ)

......

## ஜனுதிபதி மறைவுக்கு அனுதாபம்

சாய்ந்தமருது, செவ்
இந்திய ஜனுதிபதி ஜனுப் பக்குறுதீன் அலி அகமதின் மறைவுக்கு அனுதாபச் செய்தி ஒன்றினை சாய்ந்தமருது வை. எம். எம். ஏ. இயக்கத்தின் முன்னுள் தலைவரும், சமூக சேவைப் பகுதி அங்கத்தவருமான ஜனுப் ஏ. உதுமா லெவ்வை அன்னுரின் குடும்பத்தவர்களுக்கு அனுப்பியுள்ளார். (உ)

......

## கொழும்பில் சர்வோதய கருத்தரங்கு

கொழும்பு, செவ்வாய்
அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஆதரவில் சர்வோதயக் கருத்தரங்கு ஒன்று எதிர்வருஞ்சனிக்கிழமை மாலை வெள்ளவத்தை ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இலங்கைப் பல்கலைக்கழக கல்விப்பீட விரிவுரையாளர் திரு. ப. சந்திரசேகரம் "காந்தியக் கல்வி நெறி" என்னும் பொருள் பற்றி இக்கருத்தரங்கில் உரையாற்றுவார். (உ)

......

## வரட்சி நீங்குகிறது

சாய்ந்தமருது, செவ்
அம்பாறை மாவட்டத்தில் நிலவிய கொடிய வரட்சியின் பின்னர் தற்போது இம்மாவட்டத்தில் பரவலான மழை பெய்து வருகின்றது. (உ)

# மது விலக்கு தேர்தல் பிரசாரமே

## தி.மு.க. கண்டனம்

சென்னை, பெப். 22
தமிழ்நாடு வானொலியில் அரசு மதுவிலக்குப் பிரசாரம் செய்து வருவதை தி. மு. க. கண்டித்துள்ளது.

தி. மு. க. பத்திரிகையான முரசொலி இதுகுறித்து வெளியிட்டுள்ள கருத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேர்தல் பிரசாரத்தை முன்னிட்டு சென்னை வானொலியில் தீவிர மதுவிலக்குப் பிரசாரத்தை அரசினர் செய்து வருகிறார்கள். இந்தியாவில் தமிழ்நாடு, குஜராத் ஆகிய இரு மாநிலங்களில் மட்டும் தான் மதுவிலக்குச் சட்டம் நடைமுறையில் இருக்கிறது.

வானொலியில் மதுவிலக்குப் பிரசாரம் செய்வதை விடுத்து சட்டத்தின் மூலம் இந்தியா முழுவதும் மதுவிலக்கை அமுல் செய்திருக்கலாமே.

இப்போது வானொலியில் நடைபெறுவது நிச்சயம் மதுவிலக்குப் பிரசாரம் அல்ல; தேர்தல் பிரசாரமே. (இ)

......

## மின் விநியோகம்

வேலணை, செவ்வாய்
நாரந்தனை கிராமசபையின் மின் விநியோகத் திட்டம் முடிவடைந்துவருகின்றது. இன்னும் சில தினங்களில் திறப்புவிழா நடைபெறவிருக்கின்றது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் கிராமசபைத் தலைவர் திரு. த. சண்முகலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இம்மின்சாரத் திட்டத்தின் முதல்படியாக நாரந்தனையின் ஒரு பகுதியும், சுருவில் பகுதியும் மின்சாரம் பெற இருக்கின்றன. (உ)

## இந்திய தேர்தல் அரங்கு

### இந்திராவை ஆதரிக்க மறுத்தவர்...?

பிரதமர் திருமதி காந்தியை ஆதரித்து எழுத மறுத்ததால் 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஆசிரியர் பதவியை இழந்த பி.ஜி.வர்கீஸ், கேரளம்–மாவலிக்கரை தொகுதியில் எதிர்க்கட்சி ஆதரவு சுயேச்சையாளராகப் போட்டியிடுகிறார்.

### அவசர நிலை குறித்து சட்ட மந்திரி

இந்தியாவில் கள்ளக்கடத்தல்காரர்களைக் காவல் கைதிகளாகப் பிடித்துவைக்க வகைசெய்யும் தடுப்புக்காவல் சட்டம் பலப்படுத்தப்படும் பட்சத்தில் மட்டுமே அவசரகால நிலையை ரத்துச்செய்யமுடியுமென்று சட்ட அமைச்சர் திரு. கோகலே பம்பாயில் கூறினர்.

### ஜனநாயகத்தைக் காக்க தி. மு. க.வுக்கு ஆதரவு

நீதியை நிலைநாட்ட–ஜனநாயகத்தைக் காக்க, முஸ்லிம் லீக் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உறுதுணையாக நிற்குமென்று முஸ்லிம் லீக் மதுரை மாவட்டச் செயலாளர் ஜனுப் யூ. கே. ஹம்சா முகம்மது வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பனிப்பாளங்கள் உருகிய பின்னரே தேர்தல்

பனிப் பாளங்களாக உறைந்திருக்கும் ஜம்முகாஷ்மீர், லடாக் பகுதிகளுக்கான லோகசபைத் தேர்தல், இப்பாளங்கள் உருகிய பின்னர் மே அல்லது ஜூன் மாதத்தில் நடைபெறுமென்று இந்தியப் பிரதம தேர்தல் ஆணையாளர் திரு. பி. சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

### ஆக்க பூர்வ தலைமை தந்த காங்கிரஸ்

இந்தியாவுக்கு ஆக்கபூர்வமான ஒரு தலைமையைப் பெற்றுத் தந்த காங்கிரஸை ஆட்சிபீடத்திலிருந்து வெளியேற்றுவதுதான் எதிர்க்கட்சிகளின் நோக்கமென்று அ. அ. தி. மு. க. உதவிப் பொதுச் செயலாளர் திரு. நாஞ்சில் மனோகரன் பாண்டிச்சேரியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினர்.

### மொரார்ஜி தொகுதியில் 4 முனைப் போட்டி

ஜனதா கட்சித் தலைவர் திரு. மொரார்ஜி தேசாய் போட்டியிடும் சூரத் தொகுதியில் நான்கு முனைப் போட்டியிருக்கும்

## புதிய பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர்

லண்டன், பெப். 22
பிரிட்டிஷ்வெளிநாட்டமைச்சராக 38 வயதான டாக்டர் டேவிட் ஒலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 40 வருடங்களுக்குப் பின் இப்பதவியை வகிக்கும் குறைந்த வயதுடையவர் இவராகும்.

முன்னுள் வெளிநாட்டமைச்சர் திரு.அந்தனிகுரொஸ்லண்ட் (வயது 58) கடந்தவாரம் காலமானது தெரிந்ததே.

மந்திரிசபையிலும் மேலும் சில மாற்றங்களையும் பிரதமர் திரு. ஜேம்ஸ் கலகன் செய்துள்ளார். (இ)

### கேரள சட்டசபைத் தேர்தல்:

# 140 தொகுதிகளில் 560 பேர் போட்டி

புதுடில்லி, பெப். 22
கேரள சட்டசபைத் தேர்தலில் 140 தொகுதிகளுக்கு 560 பேர் போட்டியிடுகின்றனர்.

மார்ச் மாதத்தில் லோகசபைத் தேர்தலுடன் நடைபெறும் ஒரேஒரு சட்டசபைத் தேர்தல் இதுவே ஆகும்.

கேரளாவில் உள்ள 20 லோகசபைத் தொகுதிகளிலும் 63 பேர் போட்டியிடுகின்றனர்.

கர்நாடகத்தில் 28 தொகுதிகளில் 98 பேரும் ஆந்திர பிரதேசத்தில் 42 தொகுதிகளில் 165 பேரும் யூனியன் பிரதேசமான டில்லியில் 7 தொகுதிகளில் 41 பேரும் போட்டியிடுகின்றனர். (க)

### மணிவாக்கு

நிரந்தர சமாதானத்தை அடையமுடியும் என்பதில் நம்பிக்கை கொள்ளாவிட்டால், அது மனித இயல்பின் தெய்வீகத் தன்மையில் அவநம்பிக்கை கொள்வதாகும்.

--மகாத்மா காந்தி.

ஈழநாடு
THE EELANADU

# இனியும் ஏன் சந்தேகம்!

பொதுத் தேர்தல் நடைபெறுமா?

சில தினங்களுக்கு முன் வரையில், அரசியல் வட்டாரங்களில் மாத்திரமின்றிச் சாதாரணப் பொதுமக்கள் மத்தியிலும் கூடப் பரவலாக அடிபட்ட ஒரு கேள்வி இது.

தேசிய அரசுப் பேரவையின் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இக்கேள்வி உருவாயிற்றென்பது மிகையல்ல.

ஆனால், மக்கள் கருத்துக்கு மதிப்பளித்து அவர்களின் தீர்ப்பைப் பெறுவதற்கு ஒருபோதும் பின்னிற்கப்போவதில்லையெனப் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அப்பொழுதே பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

நாட்டின் பிரதம மந்திரி பொறுப்பு மிக்க ஒரு தலைவர் —இவ்வாறு அளித்த வாக்குறுதியின் மீது சந்தேகம் எழ நேர்ந்தது துரதிருஷ்டமாகும்.

அரசாங்கத்தைச் சேர்ந்த சாதாரண பேரவை உறுப்பினர்கள் சிலர் மாத்திரமின்றி, அமைச்சரவை உறுப்பினர்கள் சிலருங்கூட பொதுத் தேர்தல் அவசியமில்லையென்ற தோரணையில் கருத்துக்கள் வெளியிட்டு வந்தமையே 'தேர்தல் நடைபெறுமா?' என்ற கேள்வி மீண்டும் தலைதூக்கியதற்குக் காரணமாயிற்றென எதிர்க் கட்சியினர் கூறினர். பிரதம மந்திரியிடம் திட்டவட்டமான உறுதி மொழியொன்றை அவர்கள் கோரினார்கள்.

அரசியல் சட்டத்தின் பிரகாரம் அரசு நடந்துகொள்ளும் என்று ஏற்கனவே தாம் உறுதியளித்திருப்பதைச் சுட்டிக்காட்டிய பிரதம மந்திரி, ஜனநாயக அமைப்பில் எந்தவொரு பிரஜையும் தனது கருத்துக்களை மக்கள் முன் வைக்கும் உரிமையுண்டு என்பதையும் வலியுறுத்தினார்.

என்றாலும் 'தேர்தல் வருமா?' என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளி ஏற்படவில்லை.

அந்தரங்கமாக ஏதோ ஒரு திட்டம் உருவாவது போலவும் வாக்களிப்பின் மூலம் மக்கள் கருத்துக் கணிப்புக்கு இடம் வைக்காத முறையில் ஆட்சியை நீடிக்க வழி சமைப்பது போலவும் ''குசுகுசு'' பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்றன.

அரசியல் ஆருடவாதிகள் உருவாக்கிவிட்ட இந்த வதந்திகள் பூதாகாரமாக உருவம் கொடுத்து வர்ணிக்கப்பட்டன. சாதாரண மக்கள் மத்தியிலும்கூட அச்சம் உருவாகக்கூடிய அளவுக்கு இது பரவியது.

அராஜக நிலை உருவான போது அமுலுக்கு வந்த அவசரகாலச் சட்டம் தொடர்ந்து நீடித்துவந்ததும், இந்த வதந்தி வளர்வதற்குத் தூண்டுதலாக அமைந்தது.

இதே சமயம், அரசாங்க தோழமைக் கட்சிகளுக்கிடையில் கருத்து மோதல்கள் வெளியேற்றங்கள், வேலை நிறுத்தங்கள், போராட்டங்கள் என்று இன்னோரன்ன அரசியல் சூறாவளிகள் சுழன்றடித்துக் கொண்டிருந்தன, அரசின் பதவிக் காலமும் கரைந்து கொண்டிருந்தது.

நிலைமைகளை உற்றுக் கவனித்துவந்த பிரதம மந்திரி பொதுத்தேர்தல் நடத்தப்படுவதற்கான சூழ்நிலையை மெதுவாக-ஆனால் உறுதியாக உருவாக்குவதில் அக்கறையுடன் இருந்துவந்துள்ளார் என்பது கடந்த சில வாரங்களில் அவர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் கவனிக்கும்போது உணரமுடிகின்றது.

பத்திரிகைத் தணிக்கை நீக்கப்பட்டது, அவசரகால நிலை அகற்றப்பட்டது, தமிழ் இளைஞர்கள் விடுதலையானது போன்றசிலவற்றை இங்கு குறிப்பிடலாம்.

அத்துடன் அவர் நின்றுவிடவில்லை.

'தேர்தல் நடைபெறுமா?' என்ற அரசியல் பூச்சாண்டிக்கு அறுதியாக ஆப்பு வைக்கும் அறிவித்தல் ஒன்றையும் சில தினங்களுக்கு முன் அவர் விடுத்துள்ளார்

''மே மாதம் 19ந் திகதி ஆட்சிமன்றம் மீண்டும் கூடும். அதன் பின்னர் அரசியலமைப்பின்படி ஆட்சிமன்றம் கலைக்கப்படும்.''

பசறைத் தொகுதியில் லுணுகலை என்ற இடத்தில் மக்கள் மத்தியில் இதனைப் பிரதமர் வெளியிட்டுள்ளார்

ஆட்சிமன்றம் கலைக்கப்படின் முறைப்படி பொதுத் தேர்தல் நடக்குமென்பதில் இனியும் சந்தேகம் நிலவ நியாயமில்லை.

எனவே, பொதுத் தேர்தலுக்கான சூழ்நிலையைத் தன்னளவில் பிரதம மந்திரி உருவாக்கிவரும் இதேவேளையில், அந்தச் சூழ்நிலையை உறுதிப்படுத்தும் வகையில் ஏனைய அரசியல் தலைவர்களும் கட்சிகளும் நடந்துகொள்வார்களென்று எதிர்பார்ப்பது நியாயமே.

---

### பண்டிதமணியின் பகவத்கீதை வெண்பா

# “வெண்பாவுக்குப் பெரியதம்பி”

**— பண்டிதமணி**

[புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் ஆக்கியுள்ள 'பகவத் கீதை வெண்பா' (மூன்று பாகங்கள்) எனும் நூலுக்கு அமரர் இராமச்சந்திரா அவர்கள் எழுதியுள்ள அருமையான ஆராய்ச்சி முன்னுரை இதுவரை மூன்று பகுதிகளாக வெளியாகியுள்ளது. எஞ்சியுள்ள கடைசிப்பகுதி இனி வெளிவரும்.]

ஆ—ர்.

புலவர்மணியின் மனைவியாரின் உடல்நிலை சத்திரசிகிச்சையின்றி எப்படி இயல்பாகவே சமநிலை அடைந்ததோ அதே போல் அவர் இயல்பாகவே பாரதியார் நூலைக்கண்டெடுத்து இயல்பாகப்படித்து, இயல்பாகப்பாடிய கீதை வெண்பாக்களால் அவரது மனமும் இயல்பாகவே சாந்திஅடைந்துவிட்டது. அதன்மேல் 'பகவத்கீதை' அவருக்குச் சாதனநூலாய்விட்டது.

ஆறு அத்தியாயங்களை இயல்பாகவேபாடிமுடித்தபுலவர்க்கு ஏனைய அத்தியாயங்களையும் பாடவேண்டுமென்ற அவசரம் உண்டாகவில்லை. பக்தி. ஞான சாதனை மேலும் வேண்டுமென உணர்ந்தார். இதுவும் திருவருட் கட்டளையாகும்.

திருவருள் இன்னுமோர்வினையாட்டும்செய்தது. 'வீரகேசரி'ப்பத்திரிகைக்கு ஆசிரியராக ஒரு பக்தனைச் சென்னையிலிருந்து கொழும்புக்குக் கொண்டு வந்து சேர்த்தது. அவர் பெயர் கே. பி. ஹரன். அந்த அன்பர் ஞாயிற்றுக்கிழமை 'வீரகேசரி'யில் சமயசமரச ஞானவிடயங்களை எழுதக் கூடியவர்களைத் தேடிப்பிடித்தார். இந்தச்சந்தர்ப்பத்திலேதான்புலவர்மணியின் கீதைவெண்பாக்கள் அவரது கவனத்துக்குவந்தன. 1944ம் ஆண்டிலே ஞாயிறுதோறும் 'வீரகேசரி'யில் அந்த வெண்பாக்கள் சிறப்பிடம் பெற்றன. அதேகாலத்தில் அறிஞர் ஹரன் அவர்களின் அன்புக்கட்டளையை மறுக்க முடியாமல் சமய சம்பந்தமான எமது கட்டுரைகளும் ஞாயிறு 'வீரகேசரி'யில் ஒழுங்காக வந்து கொண்டிருந்தமையால், அந்த வெண்பாக்களைத் தவறாமல் படிக்கும் இன்ப பாக்கியம் எமக்குக்கிடைத்தது. எம்மைப் போலவே கீதை அபிமானிகள் வேறுபலரும்படித்தனர். அவர்களுள் முக்கியஸ்தர் தவத்திரு விபுலாநந்தஅடிகளார். அன்னாரின் அழைப்புக்கிணங்கி நூலாசிரியர் கொழும்புவந்து அடிகளார் தலைமையிலேயே கீதை வெண்பாக்களை விரித்துரைத்தனர். இதுநடந்தது ஸ்ரீராம கிருஷ்ண சங்கத் திருமடத்தில்.

பின்னர் அடிகளார் சிவபதமடைந்து நான்கு ஆண்டுகள் கழிந்ததும் மட்டக்களப்பிலே பெரும்பாக வித்யாதரிசியாக இருந்துவரும், புலவர்மணியின் நண்பருமாகிய மல்லாகம் திரு. அ. சரவணமுத்து அவர்களின் நன்முயற்சியால் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தச் சங்கத்தின் ஆதரவுடன் சைவப்பெரியார் சு. நடேசபிள்ளை அவர்களின் தலைமையிலே வண்ணார்பண்ணை வைத்தீசுவரவித்தியாலய மண்டபத்தில் கீதைவெண்பாவின் முதற்பகுதியான 'கருமயோகம்' அரங்கேற்றப்பெற்றது. அரங்கேற்ற விழாவில் நூலாசிரியரைப் பாராட்டிப் பேசியவர்களுள் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களையும், பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரஐயர் அவர்களையும் இங்கு குறிப்பிடவேண்டும். முந்தியவர் தமது பாராட்டில் 'ஒரு காலத்தில் வெண்பாவில் புகழேந்தி என்றிருந்தது. இக்காலத்தில் வெண்பாவிற் பெரியதம்பி என்று வழங்குவவைக் கவிதை உலகம் நன்கறியும்' எனக் கூறியுள்ளார். அதில் அடங்கியுள்ள உண்மையைத் தமிழ்பேசும் நல்லுலகு அவரது இரண்டாம் மூன்றும் பாகங்களாகிய 'பக்தியோகம்' 'ஞானயோகம்' இரண்டையும் படித்ததும் பூரணமாய் ஏற்றுக்கொள்ளுமென்பது திண்ணம். முதலாம் பாகம் அச்சேறியது 1962இல், இரண்டாம்பாகம் 1974இல், மூன்றும் பாகமான இந்நூல் இப்போதுதான் அச்சேறுகின்றது.

கவிதைஎன்றாலும்சரி, வசனமென்றாலும்சரி எங்கே எளிமையும் இனிமையும் இயைகின்றனவோ அங்கேதெளிவும் வலிய வந்து சேர்ந்துவிடும். இந்தத் தனிச்சிறப்பைப் புலவர்மணியின் கவிதையிற் காண்கின்றோம். அதுமாத்திரமல்ல, அவர் ஒவ்வொரு வெண்பாவுக்கும் வரைந்துள்ள விளக்கவுரையின் அருஞ்சிறப்பு எம்மால் எடுத்து விளக்கும் தரத்ததல்ல. சங்க காலத்திலிருந்து இருபதாம் நூற்றாண்டின் மத்திய காலம் வரையில் தமிழ் மொழியிலே தோன்றியுள்ள நூல்கள் அனந்தம். அவைஒரு பெருஞ் சமுத்திரம் அவற்றுள் ஆழ்ந்து கிடக்கும் முத்துக்கள் பலவற்றை தேர்ந்தெடுத்து வாசகர்முன் சமர்ப்பிக்கின்ற அருஞ்செயல் பெரும்பயன் தருவதாகும்.

முக்குணப் போர்க்களமாகிய இம்மண்ணுலகில் மக்கள் செய்யும் வேள்வி, தானம், தவம் எல்லாம், சாத்திவிகம், இராசதம், தாமதம் ஆகிய தன்மை உடையனவாய் நன்மையும் தீமையும் பயக்கின்றன என்பதை 17ம், 18ம் அத்தியாயங்களில் ஆசிரியர் விளக்கியுள்ள விதம் யாம் இதுவரை கண்டும் கேட்டுமிராத அற்புத முறையிலாகும். இப்பகுதியில் ஆசிரியர் மேற்கோளாக எடுத்தாண்டிருப்பது நாவலர் காலத்தில் வாழ்ந்துபோன நீதிபதியும் பலவருமான வேதநாயகம்பிள்ளை பாடலில் வரும் கீழ்க்கண்டவரிகள்.

(5-ம் பக்கம் பார்க்க)

---

# பழந்தமிழ் நாட்டில் நிலவிய நீதி நிர்வாகம்

**செ. சிறீக்கந்தராசா**

கிறிஸ்துவுக்கு முன்னர் உரோமாபுரியில் இருந்த நீதிமன்றங்களோ, சட்டங்களோ, சட்டத்தொகுப்புகளோ தமிழ்நாட்டில் இருந்தன என்று கூறுவதற்குச் சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை என்பது உண்மையே. இத்தாலியில் நிலவிய சட்டம் தமிழ் நாட்டில் நிலவவில்லை. சங்க காலத்தில் நிலவவில்லையென்பதால் நாம் வெட்கப்படவேண்டியதும் இல்லை. ஒருசமுதாயத்திலே அல்லது நாட்டிலே நிலவுகின்ற நிறுவனங்கள் அல்லது தாபனங்கள் தோன்றியமைக்கு அந்தச் சமுதாயத்திலே அல்லது நாட்டிலே இருந்துவந்த காரணிகளே அடிப்படையாக அமைகின்றன. அதாவது தேவையையொட்டியே அவை தோற்றம் கொள்ளுகின்றன. இந்தத்தேவைஅல்லதுதேவைப்பாடு எல்லாச் சமுதாயத்துக்கும் ஒன்றாக இருக்கவேண்டுவதில்லை. உரோமாபுரியிலே சட்டங்கள் தோன்றுவதற்கும் நீதிமன்றங்கள் ஏற்படுவதற்கும் உரோமாபுரியிலே நிலவிய வாழ்க்கை முறையும், சமுதாய அமைப்புமே காரணிகளாக

**சட்டமும் சமுதாயமும் (3)**

இருந்திருக்கவேண்டும். சீமான்கள் என்றும் சாமானியர்கள் என்றும் அடிமைகள் என்றும் மக்கள்பாகுபடுத்தப்பட்டிருந்தமையாலேயே உரோமாபுரியில் சட்டங்களும் நீதிமன்றங்களும் எழுந்தன என்றுகூறுவது பிழையாகாது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் அடிமை நிலையோ கொத்தடிமை நிலையோ சங்ககாலத்திலோ அதற்கு முன்னரோ நிலவியதாகச் சான்றில்லை. சாதிப்பாகுபாடில்லாத தமிழ்ச்சமுதாயத்தில் பெருவாரியாகச்சட்டம் பெருகாமற்போனதில் வியப்பில்லை. சிரமமுறையில் அமைந்த நீதிநிருவாக அமைப்பு ஏற்படாமற்போனதும் ஆச்சரியத்தைத் தரவில்லை.

இலங்கையிலே இன்று நாம் காணுகின்ற நீதிமன்றங்களுக்குச் சமமான நீதிமன்றங்கள் பழந்தமிழகத்தில் இருக்கவில்லைத்தான். இன்று நடைமுறையிலிருக்கும் சட்டங்களும்சட்டத் தொகுப்புக்களும், சட்ட அறிக்கைகளும் முன்தீர்ப்புகளும் இருக்கவில்லைத்தான். ஆனாலும் அன்றைய தமிழ்ச் சமுதாயத்திற்கு அவசியமாக இருந்திருக்கக் கூடிய அத்தகைய நீதிமன்றங்களும் நீதிநிருவாகமும் அக்காலத்தில் இருந்தன என்று ஊகிக்கமுடியும். அவ்வாறு ஊகிப்பதற்குத் தமிழ் இலக்கியச்சார்பில் சான்றுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படுகின்றன. இயைபான இலக்கிய அடிகளை இங்கே குறிப்பிடுதல்

(5-ம் பக்கம் பார்க்க)

---

### ஆசிரியருக்குக் கடிதம்:

# எம்சமூகத்திற்கு கிடைத்தபெருமை

வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வரர் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று இசைக் கலைக்குப் பெருமதிப்புக் கொடுக்கும்வகையில், ஆலயத்தில் அறுபது ஆண்டுகாலம் சேவை செய்தமையைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக எமது சமூகத்திடையே தோன்றிய நாதஸ்வர வித்துவான் சு. வைரவநாதன் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமை எமது சமூகத்திடையே மிகவும் பெருமைப்படக்கூடிய விஷயமாகும்.

வளர்ந்துவரும் இளம் கலைஞர்கட்கு இவருடைய சேவை ஓர் எடுத்துக்காட்டாகும். ஆர்வமும், தொழிலூக்கமும், கடமை கண்ணியமும்நிறைந்த எதிர்காலத்தை நாமும் உருவாக்கவேண்டும் என்ற எண்ணத்தை மனதில் நன்கு நிலைபெறச் செய்ய அமைந்த நல்ல விழாவாகவும் மேற்படி விழா காணப்பட்டது.

அவர் கடந்த காலங்களில் பெற்ற பாராட்டுக்கள் பல இருந்தும், இவ்விழா மிகச் சிறப்புற அமைந்திருந்தமைக்கு யாழ். இசை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் நன்றி கலந்த பாராட்டுக்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

**து. இரத்தினகோபால்**
தலைவர்
யாழ். இசை அபிவிருத்திச் சங்கம்.

# ‘மாவட்டரீதியில் மந்திரிகளை மக்களே தெரிவுசெய்வார்கள்’

## யூ. என். பி. திட்டம் பற்றி பிரேமதாசா

மாத்தளை, செவ்.

‘நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் மக்கள்கமிட்டி – விவசாயக்குழு உறுப்பினர்களை மக்கள்தான் தெரிவுசெய்வார்கள்,.

மாத்தளையில் நடந்த ஐக்கிய தேசியக்கட்சிக் கூட்டத்தில் பேசிய திரு. ஆர். பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. பிரேமதாசா மேலும் கூறியதாவது: அரசாங்க நிர்வாகத்தை நாம் தொகுதிரீதியில்பரவலாக்குவோம். தற்போதுள்ள அரசியல் சாசனத்திற்குப் பதிலாக புதியஒருஅரசியல் சாசனத்தை உருவாக்குவோம். ஜனாதிபதியை மக்களே தெரிவுசெய்யக்கூடிய விதத்தில் அரசியல் சாசனத்தை மாற்றி அமைப்போம்.

மாவட்டரீதியிலான அமைச்சர்களையும், மக்களே தெரிவுசெய்யக்கூடியவிதத்தில் மாற்றம் செய்வோம்.

தேசியஅரசுப்பேரவை உறுப்பினர்கள், தங்கள் மக்களின் சேவையாளர்களேயன்றி எஜமானர்களல்லவென்பதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

### தகுதி அடிப்படையில் வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்புக்களை ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் தகுதிஅடிப்படையிலேயே வழங்கும். வேலை வழங்கும்போது தகுதியைத்தவிர வேறு எதனையும் கவனத்தில்கொள்ளமாட்டோம்.

எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கப்படும். எவ்விஷயத்திலும் எவ்வித பாகுபாடும் காட்டப்படமாட்டாது. யூ. என். பி. ஆட்சியின்கீழ், தரத்திற்கு அமைய பதவி உயர்ச்சிகள் வழங்கப்படும்.

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் புதல்வி மாதம் 2500 ரூபா சம்பளம் பெறும் அதேவேளையில் சாதாரண ஒரு பெண்ணின் புதல்வி பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்துகொண்டு மாதம் 250 ரூபா சம்பளம் பெறுவதில் என்ன நீதி இருக்கிறது?

### அரசியல் நியமனங்கள் பறிபோகும்

''அமைச்சர்களின் உறுப்பினர்கள்; அரசாங்க எம்.பிக்களின் உறவினர்கள் என்ற ஒரே ஒரு தகுதியில் பல்வேறு இலாகாக்களில் அரசியல் நியமனம் பெற்றுள்ள அத்தனை பேர்களையும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் வேலை நீக்கம் செய்யத்தவறுது என்பதை இங்கு கூறிவைக்க விரும்புகிறேன்.

''அரசின் தவறான போக்கினாலேயே மக்கள் இன்றுபலத்த கஷ்டத்தை அடைந்துவருகின்றார்கள். ஆட்சியாளர் தாங்கள் செய்த பாவங்களுக்கு கணக்கை தீர்க்கும் நாள் அதிக தூரத்திலில்லை.

### பிரதமர், மந்திரிகளை நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கக்கூடாது

''தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டதும் பிரதமரோ மற்றும் அமைச்சர்களோ தேர்தல் முடிவுவெளிவரும்வரை நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கக்கூடாது என்றும் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டு அதிகாரியை கேட்கவிருக்கிறோம். அப்படி ஏதாவது மாறாக நடந்தால் கட்டுப்பாட்டு அதிகாரிதான்பொறுப்பாளியாவார் என்பயையும் கூறி வைக்கவிரும்புகின்றேன்''. (க)

......

## மலர்ராணி விடுதலை

மாவிட்டபுரம், செவ்.

அரசினருக்குச் சொந்தமான பிறநாட்டு அரிசியைக் களவாடியதாக பெண்மணி ஒருவருக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து அரசினருக்குச் சொந்தமான 723 ரூபா பெறுமதியான பிறநாட்டு அரிசியைக் களவாடியதாக காங்கேசன்துறையைச் சேர்ந்த அசோகராசா மலர்ராணி என்ற பெண்மணிக்கெதிராக காங்கேசன்துறைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தனர்.

எதிரி தரப்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார், (உ)

## செயற்குழு தெரிவு

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம் பண்ணாகம் தெற்கு மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் பெற்றார் ஆசிரியர்சங்க வருடாந்தக் கூட்டத்தில் அதிபர் வித்துவான் மூ. நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருடச் செயற்குழு உறுப்பினர்களாகப் பின வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்:வித்துவான் மூ. நவரத்தினம் செயலாளர்: பொ.குலவீரசிங்கம பொருளாளர்:–ஆசிரியர் அ.நடராசா செயற்குழு உறுப்பினர்களாக சி.ஞானசந்திரமூர்த்தி அ. எதிர்மனசிங்கம் இ.வரதராசா பண்டிதர் அ.ஆறுமுகம் இ. தம்பிராசா செல்வி நேசம்மா இராமலிங்கம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.(உ)

......

## வெண்பாவுக்கு ....

(4–ம் பக்கத் தொடர்ச்சி)

‘புண்ணியம் போற்பாவம்–
மனமேபுரிந்தாய்கீதினமே
திண்ணமாய்க் குளிக்கப்–
போயுந்தன் மேலே
சேற்றைப் பூசிக்கொண்டு
திரும்புதல் போலே
புண்ணியம்’

இதுதவத்தைப்பற்றிய விளக்கத்தில் வருவது. அடுத்த வெண்பா தானத்தைப் பற்றியது. அதற்குத் தாம் கொடுக்கும் விளக்கத்துக்குச் சாட்சியாக வள்ளுவரையும், கம்பரையும் விபுலானந்தரையும் நம்முன் அழைத்துப்பேசச் செய்கின்றார் ஆசிரியர்.

கந்தபுராணத்தில் வரும்,

அவனியில் அறமெல்லாம்
அடிதலை தடுமாறிப்
பவவினை யாமென்றே பற்பல
ருஞ்செய்ய’

என்னும் அருள்வாக்கில் கீதை 18 ஆம் அத்தியாயத்தின் 32 ஆம் சுலோகக் கருத்தின் எதிரொலியைக் கேட்கின்றோம். எங்கள் புலவர் மணி அதே சுலோகத்தைத் தமிழில் வெண்பாவாகத் தரும் அழகையும், அருமையையும் பாருங்கள்:

‘அறியாமை யாமிருளில்
ஆழ்ந்த தர்மம் தன்னைக்
குறியாமே தர்மமெனத்
கொண்டு–நெறிமாறி
எல்லாம் தலைகீழ் எதிர்மாறுகக் காணுமே பொல்லாத
தாமதப்புத்தி’

இப்படி உதாரணங்கள் எடுத்தாளப் போனால் இம்முன்னுரையே ஒரு தனி நூலாக உருவெடுத் துவிடும். ஆகையால் புலவர் மணியின் கவிதைகள் கற்போர் உள்ளங்களைக் கவர்ந்து, பக்திமூலம் பரவசப்படுத்தி, இறுதியில் ஞானத்தைக் காட்டிவைக்கும் தன்மையன என்று கூறிமேற் செல்வோம்.

# கச்சியப்பர் திருநாளை கொண்டாட வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கந்தபுராணம் அருளிய கச்சியப்ப சிவாசாரியார் திருநாளைக் கொண்டாடும் வண்ணம் கந்தபுராணசபைபகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது. மேற்படி திருநாளைத் தொடர்ந்துவரும் வாரத்தைக் கச்சியப்பசிவாசாரியார் வாரமாகக் கொண்டு வசதியானஒருநாளில் கொண்டாட ஆங்காங்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

கந்தபுராணபடனம், கந்தபுராணப்பணிபுரியும் சான்றோரைப் போற்றுதல், கந்தபுராணம்பற்றிய பல்வேறு நிகழ்ச்சிகளை நினைவுகூர்தல் முதலியன கச்சியப்பர் திருநாளையொட்டி நடைபெறவிருக்கின்றன.

இலைமறைகாய்போல் பொருளையும் புகழையும் நாடாது ஆங்காங்கு கந்தபுராணப் பணிபுரியும் நூற்றுக்கணக்கான சிவனடியார்களுக்குக் கந்தபுராண சபை வணக்கம் செலுத்திக் கச்சியப்பசிவாசாரியார் அடிச்சுவட்டைப் பொன்னேபோற் போற்றிவருவதற்கு நன்றி கூறுகின்றது. (உ)

# இளம் பெண்ணுக்குக் கத்தி வெட்டு

## கணவர் தேடப்படுகிறார்

நெல்லியடி, செவ்.

கணவருடன் செல்லமறுத்த இளம் மனைவி கத்தியால் வெட்டப்பட்டுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காயங்களுக்குள்ளான இளம்பெண்ணின் கணவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

புலோலி மேற்கு வாணக்குடியிருப்பைச் சேர்ந்த திருமதி செல்வராணி கிட்டிணன் என்பவரே இவ்வாறு காயத்திற்குள்ளானவராகும்,

தமதுகணவருடன் சண்டைபிடித்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறித் தமது தாயாரின் வீட்டில் வசித்து வந்தபோது இரண்டு வாரங்கள் கழித்து, தாயாரின் வீட்டுக்கு வந்த கணவர், தம்மை வரும்படிஅழைத்தபோது தாம் அவருடன் செல்ல மறுத்தபோது அவர் கையில் வைத்திருந்த கத்தியால் தமது வயிற்றில் வெட்டிவிட்டு ஓடியதாக, இப்பெண் மந்திகை அரசினர் வைத்தியசாலைப் பொலிசில் தெரிவித்துள்ள புகாரில் குறிப்பிட்டுள்ளார்.

இப்புகார் உடனடியாகப் பருத்தித்துறைப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து தலைமறைவாகியுள்ள இளம் பெண்ணின் கணவரான சி. கிட்டிணன் என்பவரைத்தேடி பருத்தித்துறைப் பொலிசார் வலைவிரித்துள்ளனர். [அ]

# பழந்தமிழ் நாட்டில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்மக்களுக்கு எழுச்சி தரக்கூடுமாதலால் அவற்றைஇங்கே சுருக்கமாகக் குறிப்பிடுகின்றோம்.

1. மன்றுபறித்துண்ணேல் (ஆத்திசூடி 23).
2. சக்கரநெறிநில் (ஆத்திசூடி 43)
3. ஓரம் சொல்லேல் (ஆத்திசூடி 108)
4. மன்றோரம் சொன்னார் மனை (நல்வழி 23)
5. நூன்முறை தெரிந்து சீலத்தொழுகு(கொன்றைவேந்தன் 53)
6. இருதாரம் ஒரு நாளும் தேடவேண்டாம் (உலகநீதி 7)
7. மன்னவர்க்கழகு செங்
கோல் முறைமை
(நறுந்தொகை–5)
8. இருவர் சொல்லையும்
எழுமுறை கேட்டே
இருவரும் பொருந்தவுரை
யாராயின் மனுமுறை
நெறியின் வழக்கிழந்தவர்
தாம் (நறுந்தொகை–75)
9. பட்டாங்கில் உள்ளபடி
(நல்வழி–2)
10. முறை தெரிந்து செல்
வர்க்கும்
(பழமொழி நானூறு–206)
11. மாதவர் நோன்பும்
மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனில்
இன்றும்
மகனை முறை செய்த மன்னன்
வழி ஓர்
துயர் வினையாளன் தோன்
றினன் என்பது
வேந்தர் தம் செவி உறுவதன்
முன்னர்
ஈங்கிவன் தன்னையும்
ஈழத்து ஏற்றுக’
(மணிமேகலை)
12. இறைகாக்கும் வைய
கம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச்
செயின்’ (குறள் 547)
13. சமன் செய்து சீர்தூக்
கும் கோல்போல்
அமைந் தொருபாற்
கோடாமை சான்றோர்க்கணி
(குறள் 118)
14. ‘ஒரு மைந்தன் தன்
குலத்துக்குள்ளான்
என்பதும்
உணரான் தருமம் தன் வழிச்
செய்கை கடன்
என்று தன்மைந்தன
மருமம் தன் தோழி உற
ஊர்ந்தான்
அருமந்த அரசாட்சி அரிதோ
மற்றெளிதோ தான்’
(பெரியபுராணம்)
15, ‘பொய்க்கரிபோகன்
மின்’
(சிலப்பதிகாரம்-4958)
16. ‘வாதாடி வழக்கழிவு
சொல்ல வேண்டாம்’
(உலகநீதி–10)
17. வழிபடுவோரை
வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழி
தேறலையே
நீ மெய்கண்ட தீமைகாணின்
ஒப்பநாடி அத்தக ஒறுத்தி
வந்தடி பொருந்தி முந்தை
நிற்பின்
தண்டமும் தணிதி
பண்டையிற் பெரிதே
(புறநானூறு–10)
18. ‘மெலிவில் செங்கோல்
நீ புறம் காப்ப’
(புறநானூறு–42)
19. ‘அறநெறி முதற்றே
அரசின் கொற்றம்
அதனால், நமரெனக் கோல்
கோடாது
பிறர் எனக் குணம் கொல்லாது
ஞாயிற்றன்ன வெந்திறல்
ஆண்மையும்
திங்களன்ன தண்பெருஞ்
சாயலும்
வானத்து அன்ன வண்மையும்
மூன்றும்’
(புறநானூறு–55)

''சொல்லப்பயன்படுவர் மேலோர் கரும்புபோற் கொல்லப் பயன்படுங்கீழ்'' என்ற குறளை நோக்கும்போது தீங்கு செய்வோரைத் தண்டிக்கும் வழக்கம் தமிழ் நாட்டில் இருந்தது என்பதை உணர முடிகிறது. கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ் களை கட்டதனோடு நேர் என்ற குறள், தீங்கு செய்தோரைத் தண்டிக்கும் வழக்கம் வள்ளுவர் காலத்தில் இருந்தது என்பதற்குச் சான்றாக உள்ளது. வள்ளுவர் வாழ்ந்த காலத்திலே நீதி நிருவாகம் முறை செய்தல் என்று அழைக்கப்பட்டது. முறை செய்வது அரசனுடைய முதன்மையான கடமையாகவும் முதன்மையான உணர்வாகவும்இருந்துள்ளது. ‘முறை செய்துகாப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்’ என்ற திருக்குறள் எமக்கு உணர்த்துவது இந்த உண்மையைத்தான். ‘நாட்டினைக் காப்பவன் மன்னவன்; அந்த மன்னவனைக் காப்பது நீதி’ என்ற தமிழ்ச் சொற்றொடர் தமிழரசாரின் நீதியுணர்வை, நீதிபோற்றும் பண்பைப் பறைசாற்றி நிற்கின்றன.

தமிழ்நாட்டில் நீதிநிருவாகம் எவ்வாறு நடைபெற்றது என்பதை விளக்கத்தமிழிலக்கியத்தில் செய்திகள் பலவும், கதைகள் சிலவும் காணப்படுகின்றன. கதை கேட்கும் உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமாதலால் அவற்றுள் ஒரு சிலவற்றை ஈண்டு பார்ப்போம்.

இன்று சட்டம் என வழங்கப்படும் விதிப்புக்கள் அன்று அறநூல்கள் எனப்பட்டன. செய்தக்க எவை செய்தக்க அல்ல எவை என்பதை இந்த அறநூல்கள் கூறின. அறநூலுக்கு முரணான செயல்கள் குற்றங்கள் எனப்பட்டன. குற்றஞ்செய்தோருக்கு மன்னன் கொடுத்த தண்டனை தெற்றம்எனப்பட்டது. அறநூல்களுக்கு மாறான செயல்கள் மட்டுமல்லாமல், அரசனுக்குமாறான செயல்கள்- கடவுளுக்கு மாறான செயல்கள் என்பனவும் குற்றங்கள் எனப்பட்டன.

கொலை, களவு, பொய், குடி, காமம் ஆகியன அறநூலுக்கு மாறான செயல்களாகக் கருதப்பட்டன. இவை ஐம்பெரும் குற்றங்கள் (பஞ்சமாபாதகங்கள்) என்றும் விபரிக்கப்பட்டன.

வரிசெலுத்தாமை, கீழறுத்தல்,நாட்டில் இரண்டகம் செய்தல் என்பன அரசுக்கெதிரான குற்றங்களாகக்கொள்ளப்பட்டன.

### தண்டனைகள்

குற்றம் புரிந்தவர்களுக்குப் பலவிதமான தண்டனைகள் கொடுக்கப்பட்டன. தண்டம், மானக்கேடு, சிறைப்பு, வேலை நீக்கம், கொலை எனப்பலவகையினதாக இருந்தது. குற்றப் பணம் கட்டும்படி பணித்தல், கோயிலில் நாள்தோறும்விளக்கெரிக்கும்படி பணித்தல்ஆகிய தண்டனைகள் தண்டம் எனப்பட்டன.

குற்றம் இழைத்தவனுடைய முகத்திலே செம்புள்ளி, கரும்பள்ளி எழுதிக் கழுதையின் மேலேயேற்றி ஊரை வலம் வரும்படி பணிக்கும் தீர்ப்பு, மானக்கேடு எனப்பட்டது.

தூணோடு கட்டிவைத்துச் சவுக்கால் அடித்தல், நெற்றியில் கல்லேற்றல், வெயிலில் நிற்கவிடுதல், கையிலே கிட்டி பூட்டல் என்பன வேதனைப்பாடு எனப்படும். அரிச்சந்திர புராணத்திலிருந்து வேதனைப்பாடு என்னும் தண்டனைபற்றி அறியக்கிடக்கின்றது.

கழுவேற்றுதல், யானையை ஏவிவிட்டுக்கொல்லுதல், புலி முன்போட்டுக் கொல்வித்தல் ஆகியனவும் நிலவியதென்பதற்கு நாயன்மார்களின் வரலாறுகள் சான்றாக உள்ளன.

குற்றவாளியாகக் காணப்பட்டதன் பின்னரே தண்டனை விதிக்கப்பட்டது. நடுவு நிலைமை தவறாமல் நீதிநிருவாகம் நடைபெற்றது என்பதற்கு நெடுமுடிக்கிள்ளி, பொற்கைப் பாண்டியன், மனுச்சோழன் ஆகியோர் பற்றிய செய்திகள் சான்றுபகர்கின்றன ஆயினும் ஆராய்ந்து பாராமல், விசாரணை செய்யாமல் தண்டனை வழங்கிய சந்தர்ப்பங்களும் இல்லாமல் இல்லை. கோவலன், பட்டினத்தார்ஆகியோரது வரலாறுகள் இந்நிலையை விளக்குகின்றன. (அ)

சங்கானை ப. நோ. கூ. ச. வேலைநிறுத்தம்:

# பேச்சுவார்த்தை நடத்த விசேட குழு நியமனம்

சங்கானை, செவ்.

சங்கானை ப. நோ. கூ. சங்க ஊழியர் பிரச்னை தொடர்பாக கூட்டுறவு அதிகார சபையால் அறிவிக்கப்பட்ட சிபார்சுகளை அமுல் நடத்துமாறு சங்கத்தலைவரையும் பணிப்பாளர் சபையையும் நேரில் சந்தித்து கோருவதற்கு சங்கப் பொதுச்சபை 7 பேர் கொண்ட விசேட குழு ஒன்றை நியமித்துள்ளது.

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் நடைபெற்றுவரும் வேலை நிறுத்தம் சம்பந்தமாக ஆராய்வதற்குகிளைக்குழு அங்கத்தவர்கள் பொதுச்சபை பிரதிநிதிகள் கொண்ட அவசரப் பொதுக் கூட்டம் ஒன்று நேற்று சங்கானை பட்டின சபை நூல் நிலைய மண்டபத்தில் திரு. ச. குலசூரியன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திலேயே மேற்படி குழு நியமிக்கப்பட்டது.

இதில் தொழிலாளர் பிரதிநிதியாக திருவாளர்கள் எஸ். கே. திருச்சிற்றம்பலம், எஸ். இராசரத்தினம் ஆகியோர் கலந்து தமது நீண்டநாள் கோரிக்கைகள் பற்றியும்கடந்தகால தொழிற்சங்க நடவடிக்கைபற்றியும் விளக்கிக் கூறினார்கள். பணிப்பாளர் சபை பிரதிநிதிகள் திருவாளர்கள் எஸ். மகாரத்தினம், எம். சிவசுப்பிரமணியம், வி. விசுவநாதன், எஸ். செல்வநாயகம், ரி. தம்பிராசா ஆகியோர் பணிப்பாளர் சபையால் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றியும் மேலும் பணிப்பாளர் சபைக்கு தொழிலாளர்களின்கோரிக்கைகள் பற்றி எடுத்துரைப்பதாகவும் கூறினார்கள்.

முன்னைநாள் சிரேஷ்ட உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு. கே. எஸ். பொன்னுத்துரை, சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. எஸ். பி. லியனகே ஆகியோரின் விசாரணைகளின் அறிக்கைகள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இவ்வறிக்கைகள் முழுமையாகக்கிடைக்கவில்லையென்றும் திரு. கே. எஸ். பொன்னுத்துரையின் அறிக்கையிலிருந்து சில சிபார்சுகளை அமுல் நடாத்தும்படி கூட்டுறவு அதிகார சபையால் நிர்வாகத்திற்குஅறிவிக்கப்பட்டிருப்பதும் இதை அமுல் நடாத்த நிர்வாகம் தவறியதாலேயே தற்போது வேலைநிறுத்தம் ஆரம்பமானதென்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

இம்மாதம் 23-ம் திகதிக்கு முன்பாக கூட்டுறவு அதிகார சபையால் அறிவிக்கப்பட்டபடி சகல சிபார்சுகளையும் அமுல் நடாத்தும்படி சங்கத்தலைவரையும் பணிப்பாளர் சபையையும்திரு. ச.குலசூரியன் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட ஏழு பேர் கொண்ட குழு நேரடியாகச் சந்தித்து கோரவேண்டுமென்றும் இதுநிறைவேற்றப்பட்டால் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் கைவிடப்பட வேண்டுமென்றும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

திருவாளர்கள் தாமோதரம் பிள்ளை கே. கதிர்காமத்தம்பி ஆகியோர் முறையே குழுவின் செயலாளர், உபதலைவராக நியமிக்கப்பட்டுள்ளனர். (இ)

# ரூ. 50000 செலவில் நவீனசந்தை

வேலணை, செவ்வாய்

புளியங்கூடல்-சரவணை விவசாய மக்களின் நன்மை கருதி அவர்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு சுமார் 50000 ஆயிரம் ரூபா செலவில் நவீன சந்தை ஒன்றை அமைப்பதற்கு நாரந்தனை கிராமசபை திட்டமிட்டுள்ளது.

இதற்கான பணத்தின் ஒரு பகுதியை அரசிடமிருந்து கிராம சபை பெற விருப்பதோடு இக்கட்டிடம் கட்டுவதற்கான இடத்தையும் மேற்படி கிராமசபை புளியங்கூடல் சந்திக்கருகாமையில் பெற்றுக் கொள்ளவுள்ளது. (உ)

......

## அடையாள அட்டை வழங்கப்படவில்லை

நல்லூர், செவ்வாய்

இரண்டு வருடங்களுக்கு முன்பு அடையாளஅட்டைக்கு விண்ணப்பித்த வண்ணார் பண்ணை மக்களில் பலருக்கு இதுவரைஅடையாள அட்டை வழங்கப்படவில்லை என விண்ணப்பித்தவர்களில் பலரும் அதிருப்தி தெரிவித்தனர். (அ)

குத்தகைக்காணிகளிலிருக்கும்

# சிறுபான்மை மக்களுக்கு காணி பெற்றுக்கொடுக்க முயற்சி

நெல்லியடி, செவ்

வடபகுதியில் காணிகளற்ற இரவல் காணிகளில் குடியிருக்கும் சிறுபான்மைத் தமிழர்களுக்கு பூதான முறையில் காணிபெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சமூக பொருளாதார குழு இதுகுறித்து ஆராய்ந்து முடிவெடுத்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலகத்தில் இக்குழுவின் தலைவர் திரு. கே. ஜெயக்கொடி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இம்முடிவின் பிரகாரம் வடபகுதியில் இரவல் காணிகளில் வசிக்கும் சிறுபான்மைத் தமிழர்களுக்கு, அக்காணிச் சொந்தக்காரர்கள் மூலம் பூதானமாக அக்காணியைப் பெற்றுக் கொடுப்பது இன்றேல் குறைந்த விலையில் அக்காணியைப் பெற்றுக் கொடுப்பதெனவும், காணிகளற்றவர்களுக்கு வேறு இடங்களில் காணி பெற்றுக் கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இத்திட்டம் முதன் முலாக யாழ்ப்பாணத் தொகுதியில் அமுல் செய்யப்படும். இதனைத் தொடர்ந்தே இத்திட்டம் ஏனைய தொகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும். இது சம்பந்தமாக யாழ்ப்பாணத் தொகுதியில் புள்ளி விபரங்களைச் சேகரிக்க திருவாளர்கள் என் ரி. செல்லத்துரை, ஆர். குணரத்தினம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.



## அந்தணரில் அந்தணர்

இன்ப நவம் கனிந்த 'யாழ்ப்பாணமென்னும் இனிய பூங்காவில், நீதி வழுவா நெறி நின்ற நீர்வேலிப் பதியாகிய நீண்டு நிமிர்ந்த தொரு பூஞ்செடியில் மலர்ந்ததொரு சிறந்த மலர், காமாட்சியம்மையின் கமல மலரடியில் கடிமணம் கமழ வாடாது ஆடாது அயர்ந்து அத்துவிதப்பட்டு (தாடலைப்பட்டு) தூங்காமற் தூங்கச் சுகித்துக்கொண்டே இருக்கிறது.

அம்மலர்தான், அன்பர் ஸ்ரீமத் சி.. தருமலிங்க ஆசாரியாரவர்கள். அவர் மனிதரில் தலையாய மனிதர். அறிஞரில் அறிஞர். அந்தணரில் அந்தணர்.

அவர் தூலஉடல்(23-2-71ல்) மறைந்தாலும் அவரின்ஆன்மா காமாட்சியம்மை ஆலயத்திலும் காமாட்சியம்மை பெயருடன் விளங்கும் சகல சங்கங்களிலும் பிரதிட்டையாய்இருக்கும்.

அவருடைய திருவடிவம் அடியேன் அகத்தில் அன்று போல் இன்று மட்டுமல்ல என்றும் அமர்ந்திருக்கும்.

வெண்ணீறு விளங்கும் மேனி, சிறியசிகை செண்படும் சிரம், புன்சிரிப்போடு பொலியும் முகம், திரிபுண்டரமாக நீறுதாங்கிய நெற்றி, கடுக்கனைக் காட்டும் சாலு, கருணை மழை பொழியுங் கண்கள், பயனில் சொற்பாடாதவாய், நமச்சிவாயத்தை மறவாத நாக்கு, கசக்கிப்பிழிந்த கௌபீனம் காணும், தினமும் தோய்த்துலர்ந்த தூய வேட்டி அசையும் அரை, நற்குஞ்சரக் கன்றுபோன்ற நடை இதுவே அது.

-பண்டிதர் வே.சங்கரப்பிள்ளை

......

சுன்னாகம் பஸ் நிலையத்தில்

# பெண்ணின் ரூ. 1,800 ரொக்கம் அபேஸ்

யாழ்ப்பாணம், புதன்

வங்கியிலிருந்து தமது கணக்கில் இருந்த பணத்தில் 1800 ரூபாவை எடுத்துக் கொண்டு பெண்மணி ஒருவர் பஸ்ஸில் பிரயாணம் செய்ய முற்பட்ட சமயம் அவரது பணம் அபேஸ் செய்யப்பட்டது.

சுன்னாகம் பஸ் நிலையத்தில் பட்டப்பகல் வேளை இத்துணிகரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி வி. துரைசாமி (வயது 50) என்ற பெண்மணியே பணத்தைப் பறிகொடுத்தவராவார்.

பஸ்ஸில் ஏறமுற்பட்ட சமயம் இவர் வைத்திருந்த பையில் இருந்தபணம் மர்மமாக அபேஸ் செய்யப்பட்டிருந்ததாம்.

இன்ஸ்பெக்டர் இ. ஏ. ஏ. காதரும், சப்-இன்ஸ்பெக்டர் ஷரத் சில்வாவும் விசாரணை புரிகின்றனர். (உ)

# தரகர் தொல்லை குறைந்தது

பண்டத்தரிப்பு, செவ்

பண்டத்தரிப்பு மத்திய சந்தையில் தரகர்களின் தொல்லையை நிறுத்துவதற்கு பட்டணசபை அதிகாரிகள் முன்வந்துள்ளனர். பட்டணசபையின் செயலாளர் இச்சந்தைக்கு நேரில் சென்று தரகர்களாக இனிமேல் எவரும் இருக்கக் கூடாது என்றும் இதை மீறி நடந்தால் பொலிஸ் நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் என்றும் எச்சரிக்கை செய்ததைத் தொடர்ந்து தரகர்களின் அட்டகாசம் குறைந்துள்ளதாகத் தெரியவருகிறது. (அ)

# "கல்விப்போதனை முறையில் மாற்றம் வேண்டும்"

சாய்ந்தமருது, செவ்வாய்

"முஸ்லிம் இளஞ் சிறுர்கள் ஆரம்ப மத்ரசாக்களில் குர் ஆன் ஓதக் கற்கும்போதே அரபு மொழியையும் கற்கக் கூடியவகையில் முஸ்லிம் மத்ரசாக்களில் தற்போது நடைமுறையிலிருக்கும் கல்விப் போதனை முறைகள் மாற்றி அமைக்கப்படவேண்டும்."

மேற்கண்டவாறு கல்முனை மாரியா வீதியில் அமைந்துள்ள அல்-மத்ரசதுல் புர்காணியா கட்டிடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய இலங்கை ஜமா சுதே இஸ்லாமியின் அமீர் மௌலவி ஏ. எல். எம். இப்ருகிம் குறிப்பிட்டார்.

மௌலவி அல்ஹாஜ் கே. எல். எம். பாருக் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அமீர் தொடர்ந்து பேசுகையில், "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பதற்கொப்ப இளமையில் படிக்கின்ற படிப்புத்தான் ஞாபகத்தில் நின்று நிலைக்கக்கூடியது. நல்லொழுக்கங்களையும், தூய்மையான நடைமுறைகளையும் அவர்களுக்கு நாம் கற்றுக் கொடுக்கவேண்டும். ஆரம்பத்திலிருந்தே மார்க்கத்தோடு ஒட்டிய சூழலில் அவர்களை வளரச் செய்தால், வளர்ந்த காலத்திலும் இறைபக்தி மிக்கவர்களாய், நல்லொழுக்கச் சீலர்களாய்த் திகழ்வர் என்பதில் சந்தேகமில்லை" என்ருர்.

மற்றும் பலரும் பேசினர். (உ)

# "நெடுந்தீவுக்கு தனி ப.நோ.கூ. சங்கம் தேவை'

யாழ்ப்பாணம், புதன்

'நெடுந்தீவு மக்கள் தமக்கு வேண்டிய அத்தியாவசிய பொருட்களைப் பெறுவதில் மிகவும் கஷ்டமுறுகின்றனர். பல நோ கூ. சங்கம் இணைக்கப்பட்ட பின் எமக்கு வழங்கப்படும் பொருட்கள் பாவனைக்கு உகந்ததாக இருப்பதில்லை. இது பற்றி நாம் தலைமை நிலையத்திற்குப் புகார் செய்த போதும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நெடுந்தீவுமக்கள் தமக்கு தனியான பல. நோ. கூ. சங்கம் அவசியம் என்னும் கொள்கையை பல வருடங்களுக்கு முன்பே எடுத்துக் கூறி வருகின்றனர். உணவுப் பொருட்கள் உட்பட அத்தியாவசிய பண்டங்களைப் பெற்றுக் கொள்வதற்காக மட்டும் நாம் பல நோ. கூ. சங்கம் எமக்குத் தனியாகத் தேவை என்று கோரவில்லை'

இவ்வாறு தீவுப்பகுதிப்பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் தீவுப்பகுதிப் பல நோ. கூ. சங்கத்தை முன் போல் பிரிக்க வேண்டுமென்பது பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றிய நெடுந்தீவு முன்னேற்றக் கழகப் பிரதிநிதி திரு. நா. இலட்சுமணராசா தெரிவித்தார்.

யாழ். அரசாங்க செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபால தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர் 'நெடுந்தீவுப் போக்குவரத்துச் சேவை சிரற்று இருப்பதால் அதனைச் சீரமைக்கவும் நோயாளர்களை எடுத்துச் செல்லவும் தனியான பல நோ. கூ. சங்கம் எம்மிடம் இருப்பின் வசதியாகும். எமது மக்களின் அவசர தேவைக்கு சங்கப்படகைத் தருமாறு கேட்டால் சங்க நிருவாகம் அதனை நிறைவேற்றப் பின் நிற்கின்றது. சுமார் 700.0 ஆயிரம் ரூபாவுக்கு மேல் முதலீட்டை வழங்கிய நாம் எமது அத்தியாவசிய தேவைக்கு அதனைப் பயன் படுத்த முடியாதவர்களாக இருக்கின்ருேம். சில சமயங்களில் உணவுப் பொருட்கள் கூட உரிய நேரங்களில் வழங்கப்படுவதில்லை. கூட்டுறவு அதிகாரசபை நெடுந்தீவு மக்களின் கஷ்டங்களை மனிதாபிமானத்துடன் ஆராய்ந்து நெடுந்தீவுக்குத் தனியான பல நோ. கூ. சங்கத்தை ஏற்படுத்தித் தர வேண்டும்' என்ருர். [உ]

......

## வேலணையில் சிவராத்திரி விழா

வேலணை, செவ்வாய்

வேலணை முதலாம் வட்டாரத்திலுள்ள முருகன் ஆலயத்தில் மகாசிவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சமயச் சொற்பொழிகளும் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள், பக்திப் பாடல்கள், கதாப்பிரசங்கம் முதலியனவும்இடம்பெற்றன.

ஃ ஃ ஃ

மகா சிவராத்திரி தினத்தையொட்டி வேலணை வெள்ளைக் கடற்கரையில் சுவாமி தீர்த்தமாடும் வைபவம் சிறப்பாக இடம்பெற்றது.

வேலணைபெருங்குளம் முத்துமாரி அம்பாள் ஆலயத்திலிருந்து வங்களாவடிச் சந்தியூடாக வேலணை முதலாம் வட்டார முருகமூர்த்தி கோவிலுக்குச்சென்று அங்கிருந்து வெள்ளைக்கடற்கரைக்குச் சென்று தீர்த்தமாடியபின் இராசவீதியாக சுவாமி சந்நிதானத்தை வந்தடைந்தது.

இம்முறை வெள்ளைக்கடற் கரையில் அனேக பக்தர்கள் தீர்த்தமாடினர். (உ)

# பஸ் சேவை சீர்குலைவு: பிரயாணிகள் அவதி

வவுணதீவு, செவ்வாய்

மட்டக்களப்பு இ. போ. ச. வின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் வலையிறவுமுகத்துவாரம் (பார்வீதி) பஸ் சேவை சமீப காலமாக சீர்குலைந்துள்ளது. இதனுல் படுவான்கரை விவசாயிகளும், பிரயாணிகளும் அவதியுறுகிருர்கள்.

இரு பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த மேற்படி பஸ் சேவைக்கு ஒரே ஒரு பஸ்மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரி, வீச்சுக்கல்முனை,சேற்றுக்குடா, புதூர், திமிலைத்தீவு, கன்னன்குடா வலையிறவு உட்பட மேற்படி சிலதுறைக் கடவைகளினுல் இயந்திரப்படகுகள்மூலம் சென்றடைய வேண்டிய விவசாயிகளும் பலதரப்பட்ட பிரயாணிகளும் மேற்படி பஸ் நிலையத்தில் மணிக்கணக்கில் காத்துக்கிடக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இவ் அவலம் குறித்து வவுணதீவு கிராம முன்னேற்றச் சங்க செயலாளர் திரு. ச. இரத்தின சிங்கம் மட்டக்களப்பு இ. போ. ச. பிராந்திய முகாமையாளருக்கும், மேற்படி மாவட்ட பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. பி. ஜி. காசிநாதருக்கும் மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். (உ)

# 5 கோடி மூலப்பொருள் இறக்குமதி

கொழும்பு, செவ்

இலங்கை வர்த்தகக் கூட்டுத் தாபனம் இவ்வருடம் 5 கோடி ரூபா பெறுமதியான நீரிறைக்கும் இயந்திரங்கள், தையல் மெஷின்கள், பட்டரிகள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான மூலப் பொருட்களை இறக்குமதிசெய்யும்.

இதுகாலவரை இப்பொருட்களைத் தனியார் துறையினரே இறக்குமதிசெய்துவந்தனர். (இ)

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவகுமார்-ஜெய்சித்ரா
தேன்சிந்துதே வானம்

நாகம்ஸ்
[சுன்னுகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி- வைஜந்திமாலா
தேன்நிலவு

NOW SHOWING
RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45.
MAN IN THE IRON MASK

Regal (Jaffna) Daily 4-45, 7-00 & 9-30 P. M.
Roger Moore in
The Man Who Haunted Himself
(Color)

ராணி கமலஹாசன் -- தீபா - சாவித்திரி நடித்த
[யாழ்நகர்] தினசரி 4 காட்சிகள்
அந்தரங்கம்

வின்ஸர் கமலஹாசன் - ஸ்ரீவித்யா
[யாழ். நகர்] சுந்தரராஜன் ஜெயசுதா
தினசரி 4 காட்சிகள் நடித்த
அபூர்வ ராகங்கள்

அனேக ரஸிகர்களின் வேண்டுகோளுக் கிணங்க
மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.
ஸ்ரீதர் எம். ஜி. ஆர். - மஞ்சுளா
சந்திரகலா -லதா
[யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள் நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்

அடுத்த வெளியீடு! 11-3-77 முதல்
சிவாஜி - ஜெயலலிதா
(இருவேடம்) நடித்த
பாட்டும் பரதமும்

ராஜா கடைசி வாரம்
[யாழ். நகர்] ஜெய்சங்கர் - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
தாய்க்கு ஒரு பிள்ளை

வெலிங்டன் எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
[யாழ். நகர்]
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
பணக்காரக் குடும்பம்

லிடோ ஏ. வி. எம். ராஜன் - லதா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
வீட்டுக்கு வந்த மருமகள்

மனோகரா 4-வது 'ஹவுஸ்புல்' வாரம்
காட்சி நேரங்கள் குறிப்பிட
[யாழ்ப்பாணம்] முடியாமைக்கு மன்னிக்கவும்.
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ராதாசலூஜா
நிர்மலா
வீரப்பா
நடித்த
சத்யா மூவிஸ்
இதயக்கனி
[ஈஸ்மன் கலர்]



## முறையிட்டும் பயனில்லையாம்

சுழிபுரம், செவ்

சுழிபுரம் கிராமசபையின் பன்னிரண்டாம் வட்டாரத்தில் வாழும் ஒரு பகுதி மக்கள் பல்வகையிலும் புறக்கணிக்கப் பட்டேவருகின்றனராம். இவர்களுக்கு மின்சார வசதி வழங்கப் படாத குறையுடன் வீதி ஒன்று பல வருடங்களாகச் செப்பனிடப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டியும் திருத்தம் செய்யப்படவில்லை என முறையிடப்படுகிறது. சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்தும்எவ்வித பயனும் கிட்டவில்லை எனக் கூறப்படுகிறது. [உ]

......

## "கிராமஅபிவிருத்தியில் இளைஞரின் பங்கு"

யாழ்ப்பாணம், புதன்

''ஓர்கிராமம் அபிவிருத்தியுற வேண்டுமாயின் இளைஞர்கள் அதில் முக்கிய இடம் பெற வேண்டும். இளைஞர்கள், இவை பெரியோர் செய்யும் காரியம் இதில் எமக்கென்ன பங்கு என்று கூறி ஒதுங்கக் கூடாது, ஓர் நாடு முன்னேற வேண்டுமாயின், அந்நாட்டின் கிராமங்கள் முன்னேடியாக அமைய வேண்டும், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும், கைத்தொழில் முயற்சிகளையும் ஆரம்பித்து செயல் படவேண்டும்.''

இவ்வாறு சண்டிலிப்பாயில் மானிப்பாய் கிராமசபை 15ம் வட்டார கிராம அபிவிருத்திச் சங்க திறப்புவிழாவில் மேற்படி சங்க உபதலைவர் திரு. செ. தில்லையம்பலம் உரையாற்றுகையில் கூறினர்.

இத் திறப்புவிழாவில் ஓர் இலவச ஆயுர்வேத வைத்திய சாலையை கு. விநேதன் திறப்பதற்கு ஏற்பாடாகி யிருந்தது தமது சார்பில் உபதலைவர் செ. தில்லையம்பலம் அவர்களையே திறந்து வைக்குமாறு அவர் பணித்தார், (இ)

......

## பெண்ணுக்குக் கத்திவெட்டு

யாழ்ப்பாணம், புதன்

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த பெண் ஒருவரின் தலையில் கத்தி வெட்டு விழுந்ததாம்.

தெல்லிப்பளையில் நடைபெற்ற இச்சம்பவத்தில் வர்ண் சோதி (வயது-30) என்ற பெண்ணே படுகாயமுற்று யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டவராவார்.

கத்தியால் வெட்டிய இனந் தெரியாத நபர் உடனே இருளோடு இருளாக ஓடி மறைந்து விட்டாராம்.

இம்மர்மக் கத்திவெட்டு தொடர்பாக சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இ.ஏ.ஏ.காதர், சப் இன்ஸ் பெக்டர் சரத்சில்வாவின் உதவியுடன் விசாரணை புரிகிறார். (உ)

......

## கைத்துப்பாக்கி சிக்கியது!

யாழ்ப்பாணம், புதன்

அனுமதிப் பத்திரம் பெருதது எனக்கருதப்படும் கைத்துப்பாக்கிஒன்றைச்சங்கானைப் பொலிசார் அராலியிலுள்ள வீடொன்றில் இருந்து கைப்பற்றியுள்ளனர்.

வேறொருவிசாரணையின் பொருட்டு மேற்படி இடத்திற்குச் சென்ற பொலிசார் இக் கைத்துப்பாக்கியைக் கைப்பற்றியதுடன் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர். (உ)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
மணப்பந்தல்

# கிணற்றில் பாய்ந்து வயோதிபர் தற்கொலை

நெல்லியடி, செவ்.

தந்தையின் தீராதநோயைக் குணப்படுத்த, அவரது பிள்ளைகள் வைத்தியசாலைக்கு அழைத்தபோது, அதற்கு மறுத்த தந்தை கிணற்றுக்குள் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

கரணவாய் கல்லுவத்தைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை (77 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து உடுப்பிட்டி மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரம் விசாரணை நடத்தினர்.

இறந்தவர் தொய்வுநோயினுல் நெடுங்காலமாக அவஸ்தைப்பட்டுவந்தமையால் அந்நோயைக் குணப்படுத்த வைத்தியசாலைக்கு வருமாறு அவரது பிள்ளைகள் அழைத்தனராம். அதற்கு இறந்தவர் தமக்கு வயது போய்விட்டதென்றும் தமது நோயைக் குணப்படுத்த வைத்தியவசதி தேவையில்லையென்றும் வற்புறுத்தினுராம். ஆனல் பிள்ளைகளோ கட்டாயம் வைத்தியசாலைக்குப் போக வரவேண்டும் என முரண்டு பிடிக்க தம்மால் வைத்தியசாலைக்கு வரமுடியாதெனக் கூறிய இறந்தவர் நேராக தோட்டத்திற்கு ஓடிச்சென்று அங்குள்ள கிணற்றுக்குள் விழுந்து மரணத்தைத் தழுவிக் கொண்டாராம்.

மரணவிசாரணை முடிவில் தற்கொலை மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

# எமது நாட்டுகூட்டுறவுத்துறை பின் தங்கியுள்ளது

சங்கானை. செவ்

கூட்டுறவுத்துறை ஒருபுனிதமான இயக்கம். இதனுல் மக்கள் அடையும் பலாபலன்கள் பற்பல. ஆனல் எமதுநாட்டை ஏனையநாடுகளுடன் ஒப்பிடுகையில் இத்துறையில் பின்தங்கிய நிலையிலேயே காண்கின்றேம். காரணம் கூட்டுறவு ஊழியர் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதேயாகும்.

இவ்வாறு வடபிராந்திய கம்யூனிஸ்ட்கட்சி (சீனச்சார்பு) செயலாளரும், தொழிற்சங்கப் பிரமுகருமான திரு. கே. செந்தில்வேல், சங்கானை ப. நோ. கூ. சங்க வேலைநிறுத்த ஊழியர் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அகில இலங்கை கூட்டுறவாளர்சம்மேளனசங்கானைக் கிளை தலைவர் திரு. பெ. கனகரத்தினம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திரு. செந்தில்வேல் மேலும் கூறியதாவது:

கடந்த பொதுத்தேர்தலின் பின் சோஷலிசத்தை எதிர்பார்த்திருந்த பொதுமக்களுக்குக்கிடைத்த பரிசு கூட்டுறவுத் துறையில் முதல் இல்லாத முதலாளிகளை உருவாக்கிக்கொடுத்தமையே. அரசு கூட்டுறவுத் துறையை முன்னேற்றமடையச் செய்வதாகக்கூறி தங்கள் அரசியல் பங்குத்தரகர்களாக இருந்த சிலரைத்தலைவர்களாக்கியது. இதனுல்அவர்கள்சிறிது காலத்திலேயே தாம் தலைமை தாங்கும் ஸ்தாபனத்தைகூறையாடி மூடுவிழா நடாத்தும் நிலைக்குக்கொண்டுவந்துபெரிய புள்ளிகளாகிவிட்டனர். இது பற்றி மேலிடத்திற்கு தெரிவிக்கப்படும் புகார்களும் நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. இது போன்ற நடைமுறைகளால்தான் நாட்டுவளர்ச்சி பின்தள்ளப்படுகின்றது.

சங்கானை ப. நோ. கூ. சங்க ஊழியர்களின் பிரச்னைகள் விரைவில் தீர்ந்துவிடுமென்ற நம்பிக்கை எமக்குண்டு. எந்த நாட்டிலும் தொழிலாளர்களின் நியாயமானகோரிக்கைகள் நிறைவேருமல் போனதில்லை என்பதை சங்கானைப் ப. நோ. கூ. சங்கம் தெரிந்து கொள்ளவேண்டும். (இ)

......

## ஏழைமாணவர்க்கு புத்தகங்கள் விநியோகம்

பண்டத்தரிப்பு, செவ்

கொக்குவில் கிராமசபை எல்லைக்குட்பட்ட வசதியற்ற பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவச பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டன.

கொக்குவில் கிராமசபை விசேட ஆணையாளர் திரு. இ. புஷ்பராஜா இப்புத்தகங்களை கொக்குவில் பகுதியிலுள்ள 13 பாடசாலைகளுக்கும் நேரில் சென்று வழங்கினர். பாடசாலைத் தலைமையாசிரியரினதும், பகுதிக் கிராம சேவையாளரினதும் சிபார்சுக் கடிதங்களைச் சமர்ப்பிக்கும் வசதியற்ற பிள்ளைகளுக்கே இவை வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

......

## குருநகரில் வரவேற்பு ஏற்பாடு

வண்ணர்பண்ணை, செவ்.

சிறைமீண்ட இளைஞர்களுக்குக் குருநகரில் வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இது சம்பந்தமான நடவடிக்கைகளை குருநகர் தமிழர் கூட்டணிப் பிரமுகரும் சட்ட மாணவருமான திரு. ம. அலோசியஸ் செய்து வருகின்றார்: (அ)

## பத்திரிகை...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொண்டிருக்கிறது. பத்திரிகை நிருபர்களுக்குத் தெரியும், நான் அவர்களுடன் எப்படிப்பழகுகிறேன் என்பது!

### அமைச்சராக மூன்றும் பின்னும்

அமைச்சராவதற்கு முன்பு நிருபர்களிடம் எவ்வளவு தோழமையுடன் உரையாடினேனே அதேநிலையில்தான், நான் அமைச்சரான பிறகும் உரையாடி உறவாடியிருக்கிறேன். அதே நிலைதான் இன்றளவும் நீடிக்கிறது. கடந்த ஓராண்டுகாலம் நிருபர்கள் என்னைச்சந்திக்கவே வரவில்லை. காரணம், நான் அளிக்கும் பேட்டிகளை ஏடுகளில் வெளியிடமுடியாமல் 'தணிக்கை' தடுத்துக்கொண்டிருந்தது.''

கலைஞர் இக்கடிதத்தில் மேலும் கூறியிருப்பதாவது: ''இவர்கள் என் செய்வார்கள் பாவம். தமிழ்நாட்டில் எதிர்க்கட்சி அணி உருவாகக்கூடாது என்பதற்கு எவ்வளவோ அற்புதச் சித்துக்களைப் புரிந்தார்கள். ஏடுகொள்ளாமல் எழுதினர்கள். அவர்களின் சூழ்ச்சிக் கோட்டைகளைத் தவிடுபொடியாக்கி தி. மு. க. - ஜனதா அணி ஆர்த்தெழுந்து நிற்கிறது.'' (உ)

## சந்தேகநபர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலமானவர் மேற்படி சம்பவத்தில் கத்திக்குத்துக்கிலக்காகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஒரு வாரத்தின் பின்பே காலமானதால் கொலைக்குற்றச்சாட்டு சுமத்த முடியாதென்றும் இவர்களைப் பிணையில் விடவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியத்தின் பிரேதபரிசோதனை அறிக்கையை பரிசீலனை செய்தபின் நீதிபதி திரு. எம். டி. ஜேசுரட்ணம் சந்தேக நபர்களை தலா 1000 சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

மேல் விசாரணை மார்ச் 1ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ)

ஈழநாடு
The EELANADU

# நெசவுக்குச் சென்ற யுவதி திரும்பவில்லையாம்

யாழ்ப்பாணம், புதன்

நெசவுசாலைக்குச் சென்ற தமது மகள் காணாமல் போய் விட்டாரென அராலியைச் சேர்ந்த தாய் ஒருவர் சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் புகார் ஒன்றினைச் செய்துள்ளார்.

கடந்த 16ம் திகதி வழமை போல்நெசவுசாலைக்குச்சென்ற ராசரத்தினம் ராஜேஸ்வரி (22 வயது) பின்னர் வீடு திரும்பவில்லையென ராஜேஸ் வரியின் தாயாரானதங்கம்மா தமது புகாரில் தெரிவித்துள் ளார். இப்புகார் தொடர்பாக கான்ஸ்டபிள் திரு. செல்வ நாயகம் புலன் விசாரணை செய்துவருகிறார். (உ

# பத்திரிகையாளருடன்எப்படி கருணாநிதி பழகுகிறார்?

சென்னை, பெப். 22

பத்திரிகை நிருபர்களுடன் தாம் பழகும்விதம் பற்றி தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக்கழகத் தலைவருமான கலைஞர் மு. கருணாநிதி விளக்கியுள்ளார்.

பிரபல தமிழகவாரசஞ்சிகை ஒன்று ''கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது நிருபர்களை எப்படிச் சந்திப்பாரோ அதே''பாணி'' யில்- அதே ''பந்தா'' வில் தான் இப்போதும் நிருபர் களைச் சந்தித்துப்பேசுகிறார்'' என்று குற்றஞ்சாட்டியிருந்தது.

இதுபற்றி கலைஞர் கருணாநிதி கூறியிருப்பதாவது:-

''பாணி-பந்தாபற்றி எழுதி மேற்படி சஞ்சிகை தனக்கென்று அமைத்துக்கொண்டிருந்த பண்பாட்டை மறுபடியும் ஒருமுறை கெடுத்

(7-ம்பக்கம் பார்க்க)

## சீனப் பிரதமர் பதவியில் மாற்றம்?

பீக்கிங், பெப். 22

சீனாவின் புதிய பிரதம மந்திரியாக, தற்போதைய பிரதிப் பிரதம மந்திரியாகக் கடமையாற்றும் திரு. சீட்டென் குவைங் நியமிக்கப் படலாம் என எதிர் பார்க்கப் படுகிறது. [உ]

## சங்கானை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர். இதனால் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் மேற் கொள்ளாமல் திரும்பிச் சென்று விட்டனர்.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. கே. ஜெய காந்தன், உதவி ஆணையாளர் திரு. எஸ். நாகலிங்கம், உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதி காரி திரு. பி. நடராசா, வலிமேற்கு அரசாங்க அதிபர் திரு. சோ. அருணாசலம் ஆகியோர் இக்குழுவில் அடங்கி யிருந்தனர்.

இவர்கள் சங்கானை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத் தில், தொழிற்சங்கப் பிரதி நிதிகளைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினர். அப் பொழுது உணவுப் பொருட் களை எடுப்பதற்கு சத்தியாக் கிரகிகளை வழிவிடுமாது கேட்ட தற்கு தொழிற்சங்கப் பிரதி நிதிகள் மறுத்துவிட்டனர் என்று தெரிகிறது.

34 சங்கக்கிளைகள் யாவும் பூட்டப்பட்ட நிலையில் உள் ளன. உத்தரவுபெற்ற வியா பாரிகளும், உணவு விநியோ கம் செய்யவில்லை.

வலி-மேற்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. சோ. அருணா சலம் கூடியவிரைவில் பாவனை யாளர்களுக்கு, அத்தியாவசிய உணவுப்பொருட்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கவிருப்பதா கத் தெரிவித்தார்.

வடபிரதேசக் கூட்டுறவுச்சம் மேளன ஊழியர் சங்கச் செய லாளர் திரு. எஸ். இராஜேந் திரன், கூட்டுறவு அமைச்ச ருக்கு எழுதியுள்ள கடிதத்தில், சங்கானை ப. நோ. கூ. ச. ஊழி யர் பிரச்னைக்கு தீர்வு காணப் படாவிட்டால், யாழ். மாவட் டத்தில் உள்ள சகல ப. நோ. கூ. சங்கங்களும் வேலைநிறுத் தத்தில் குதிக்குமெனத் தெரி வித்துள்ளார். (க-ஆ)

......

## கூட்டுத்தாபன—தனியார் கூட்டுப்படத்தயாரிப்பு

கொழும்பு, செவ்.

இலங்கையில் திரைப்படத் துறையை அபிவிருத்திசெய்வ தற்கு தனியார்துறையுடன் இணைந்து திரைப்படங்களைத் தயாரிக்க திரைப்படக்கூட்டுத் தாபனம்திட்டமிட்டுள்ளது.

தலுகமவில் பூர்த்தியாகும் நிலையில் உள்ள படப்பிடிப்பு நிலையம் திறக்கப்பட்டதும் அமுல்செய்யப்படும் என்று கூட்டுத்தாபன அதிகாரி ஒரு வர் தெரிவித்தார்.

கடந்த வருடமே இலங்கை யில் அதிகபடங்கள் தயாரிக் கப்பட்டதென்றும் இப்போது 100 படங்கள் தயாரிப்பில் உள்ளன என்றும் அதிகாரி தெரிவித்தார். (இ)

## ''விவசாயிகளிடம் வாக்குப்பெற யு.என்.பிக்கு உரிமையில்லை'' —காணி அமைச்சர்

கொழும்பு, செவ்.

''அடுத்த தேர்தலில் நமது போராட்டம், ஐக்கியதேசியக் கட்சிக்கு எதிரானது மட்டு மல்ல, சகல பிற்போக்கு சக்தி களிடமிருந்து நாட்டைக் காப் பாற்றும் போராட்டமாகும்.''

தெவிநுவரையில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் விவ சாய அமைச்சர் திரு. ஹெக் டர் கொப்பேகடுவா மேற்கண் டவாறு கூறினார்.

அமைச்சர் கொப்பேகடுவ மேலும் கூறியதாவது: புதிய ஒரு அரசியல் கட்சியை இளை ஞர்கள் பிரச்னைகளுக்காக ஆரம்பிக்கப் பேச்சுவார்த்தை நடைபெறுவதாக அறிகிறேன் இளைஞர்களின் பிரச்னைகளை மட்டும் தீர்த்துவைக்க, புதிய அரசியல் கட்சியொன்று அவசி யமல்ல. இளைஞர் பிரச்னைக ளைத் தீர்த்து வைப்பதில் ஆர் வம் கொண்ட சகலரும், ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற் காகப் பேச்சுவார்த்தை நடா த்த முன்வருமாறு அழைக்கின் றேன். அப்படியான ஒரு திட் டம் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவிடமும் மக் கள் மத்தியிலும்வைக்கப்படும்.

''காணிச்சீர் திருத்த மசோ தாவை எதிர்த்த ஐக்கிய தேசி யக்கட்சியினர்விவசாயிகளிடம் சென்று வாக்குக்கேட்பதற்கு உரிமையில்லை. காணிச் சீர் திருத்தம் பிரதமரின் ஆசியு டன் வெற்றிகரமாக அமுல் நடத்தப்பட்டு வருகிறது. அப் படியான பிரதமரையும் ஐக் கிய தேசியக்கட்சியினர் குறை கூறிவருகின்றனர். பிரதமர் விரும்பியிருந்தால் காணிச்சீர் திருத்தத்தை அமுல் செய்யா மல் தடுத்திருக்கலாம். ஆனால் அவர்அப்படிச்செய்யவில்லை.'' (க-அ)

—

## 60 பேருக்கு விஸா முடிந்துவிட்டது

கொழும்பு, செவ்வாய்

விஸா முடிந்த பின்னரும் இலங்கையில் தங்கியிருக்கும் இந்திய வம்சாவளியினரை கண்டுபிடிக்கும் நடவடிக் கையை குடிவரவு குடியகல்வு இலாகா தீவிரப்படுத்தியுள் ளது.

விஸாமுடிந்த பின்னரும் தல வாக்கொல்லையில் தங்கியிருந்த 60 பேரை கடந்தவாரம் இலாகா அதிகாரிகள் கண்டு பிடித்தனர். இது போன்ற சோதனைகளை இலாகா மேலும் பல பகுதிகளுக்கு விஸ்தரித்துள் ளது. (இ)

## பன்விலையில் தேடப்பட்டவர் சாவகச்சேரியில் கைது

மட்டுவில், செவ்.

சாவகச்சேரி பஸ் நிலையத் தில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய நபர் ஒருவரைச் சாவகச்சேரிப் பொலிஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள் திரு. எஸ்.நவரத்தினம் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியபோது அவர் பன்விலை பொலிசிற்கு டிமிக்கி கொடுத்துவரும் பேர் வழி என்பது தெரியவந்தது.

பேயன் மாயழகு என்ற இந் நபர் பன்விலை பொலிஸ்பகுதி யைச் சேர்ந்தவர் என்றும் பொக்கற், திருட்டு, அடிதடி சண்டை ஆகியன காரண மாகப் பலமுறை சிறை சென்ற ஒரு ஐ.ஆர். ஸி. என்றும் பன் விலை பொலிஸார் நீண்ட நாட் களாகத் தேடிவருகின்றனர் என்றும் விசாரணையின் பின் தெரியவந்தது.

அவரைக் கைது செய்த திரு. நவரத்தினம் உடனடியா கப் பன்விலைப் பொலிஸிற்குத் தகவல் கொடுத்துள்ளார். பேயன் மாயழகு, சாவகச் சேரி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிபதி திரு. கே. பாலகிட்ண ரால் விளக்கமறியலில் வைக் கப்பட்டார். (இ)

## கிரிக்கெட் இலங்கை - 238

காலி, செவ்

இங்கிலாந்துக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், இலங்கைத் தலைவர் தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் காலியில் நடைபெறும் இரண்டு நாள் கிரிக்கெட் போட்டியில் இன்றைய ஆட்டம் முடிவ டையும் போது இலங்கைத் தலைவர் கோஷ்டி முதல் இன் னிங்ஸில் மொத்தம் 238 ஒட் டங்களைப் பெற்றது. காப் டன் வெளட்டஸ் ஆட்டமிழக் காமல் 53 ஓட்டங்களையும், சுசி பெர்ணாண்டோ 31 ஓட்டங்க ளையும், ஸ்ரீதரன் ஜெகநாதன் 20 ஓட்டங்களையும் பெற்ற னர். கோப் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

முதல்நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்துக் கோஷ்டி ஒரு ஓவர் மட்டுமே துடுப்பெடுத் தாடி, ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் விக்கெட் இழப் பின்றி இருக்கிறது. (ஆ)

## மே 19...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு செட்டித்தெரு வில் மக்கள்வங்கிக்கிளையொன்றை திறந்துவைத்துப் பேசுகையில் அமைச்சர் பீலிக்ஸ் இவ்வாறு சொன்னார்.

### அடைவுநகை ஏலத்தில் போகாது

இக்கூட்டத்தில் பேசிய மக்கள்வங்கித் தலைவர் திரு. அபயவர்த்தன பேசுகையில், வங்கியில் வைக்கப்படும்நகை களை கஷ்டம் காரணமாக மீளத்தரமுடியாவிடில் தற் போது அவைகள் ஏலத்தில் விற்கப்படுவதாகவும், இனி மேல் இதனை இவ்விதம் செய் யாமல் குறைந்த விலைக்கு நகைச் சொந்தக்காரர்க ளுக்கே இலகுமுறை வழங்கநட வடிக்கைஎடுக்கப்படுவதாகத் தெரிவித்தார். (ஆ)

......

## மந்திகை மனநோய் ஆஸ்பத்திரியில் மருந்து இல்லை

மட்டுவில், செவ்.

மந்திகை மனநோய் ஆஸ்பத் திரியில் மருந்து இல்லாததினால் நோயாளிகள் பெரிதும் அவதி யுறுகின்றனர். வடபகுதியில் பல பாகங்களிலிருந்தும், பஸ் ஸிலும், மோட்டார் வாகனங் களிலும், பெருந்தொகைப் பணம்செலவிட்டுவரும் நோயா ளர் ஏமாற்றத்துடன் திரும்பு கின்றனராம்.

கிளிநொச்சிப் பகுதியிலிருந் தும்கூட பலமனநோயாளர்கள் மந்திகை ஆஸ்பத்திரிக்கு வந்து மருந்தில்லாது, ஏமாற்றத் துடன் திரும்பியுள்ளனராம். (இ)

## உதயசூரியன் சின்னம் நவம் மறுப்பு

யாழ்ப்பாணம், வியா

தமிழர் சுயாட்சிக் கழகம் ருகிற பொதுத் தேர்தலு க்கு உதய சூரியன் சின்னத் தைக்கேட்கவிருப்பதாக வெளி வந்த செய்திக்கு தமிழர் சுயா ட்சிக் கழகத் தலைவரும் முன் னாள் ஊர்காவற்றுறை எம். பியுமான திரு. வீ. நவரத்தி னம் மறுப்புத் தெரிவித்துள் ளார்.

1970-ம் ஆண்டுக்கு முன் னரே காலி எம். பி. டாக்டர் டபிள்யூ. தகநாயக்காவின் தலைமையிலான லங்கா பிரஜா தந்திரவாதி பக்சேக்கு தேர் தல் சின்னமாக உதய சூரியன் வழங்கப்பட்டு விட்டதாகவும் இப்போது தமிழர் சுயாட்சிக் கழகத்துக்கு உதய சூரியனை தேர்தல் சின்னமாகத் தரு மாறு கேட்கும் யோசனை தம க்கு இல்லை என்றும் திரு. நவரத்தினம் தெரிவித்தார். [ஆ]

பயங்கரத்தாக்குதல்:

## ஆஸ்பத்திரித் தொழிலாளி ஆஸ்பத்திரியில் அனுமதி

பண்டத்தரிப்பு, செவ்வாய்

பகல்கடமை முடிந்து வீட் டிற்கு உணவருந்தும் பொருட் டுச் சென்று கொண்டிருந்த ஆஸ்பத்திரித் தொழிலாளி ஒருவர் பயங்கரத் தாக்குத லுக்கு இலக்காகிப் படுகாயம் களுடன் யாழ். பெரியாஸ் பத்திரியில் அனுமதிக்கப் பட் டுள்ளார். மண்டைதீவில நேற்று நடைபெற்ற இச்சம்ப வத்தில் படுகாயங்களுக்கு உள் ளானவர் மண்டைதீவு அர சினர் ஆஸ்பத்திரி தொழி லாளியான வ.சின்னத்தம்பி என்பவராவார்.

மண்டைதீவு அரசினர் ஆஸ் பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர் ஆர்.கோணேச லிங்கம் இதுபற்றி செய்து கொண்ட புகாரினையடுத்து யாழ்.பொலிசார் புலன் விசா ரணை புரிகின்றனர்.

எவரும் இதுவரை கைதாக வில்லை. (உ)

## 'உடன் விறகு வேண்டும்'

சங்கானை, செவ்

சங்கானை, அரசினர் மராக் காலையில் விறகு இல்லாததன் காரணமாக பொதுமக்கள் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையால் உடனடியாக விறகை இங்கு அனுப்பிவைக்கும்படி சங்கானை பட்டினசபைத் தலைவர் யாழ். பிரதேச மரக்கூட்டுத்தாபன ஆணையாளரை அவசர தந்தி மூலம் கேட்டுள்ளார். (இ)

## வி. கழகங்கள் அனுதாபம்

நெல்லியடி, செவ்.

கிளிநொச்சிப் பகுதி விளை யாட்டு அதிகாரி திரு. வி. எஸ். கதிர்காமத்தம்பியின் மறைவை யொட்டி வடமராட்சிப்பகுதி விளையாட்டுக் கழகங்கள் அனு தாபம் தெரிவித்துள்ளன.

புலோலி வேலாயுதம் மகா வித்தியாலயம், நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம் ஆகியவற்றில் விளையாட்டு ஆசிரியராகவும் இவர் பணி யாற்றினார். (அ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத் திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு பெப்ர வரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanadu P O Box 49, Jaffna Telegram: Eelanadu Telephone 389 Registered as a Newspeper in Sri lanka.